169

ஜகன் மோகினி

அக்டோபர்
1952

JAGAN MOHINI

ESTD. 1923

அணா
நான்கு

169
1.53

N52·29·10



சிகரம்

இரண்டாம்
பாகம்
அச்சில்

அரிய தமிழ் விருந்து

உதயசூரியன்

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
முதல் நவீனம் - ரூ. 1-4-0

1. மங்களபுரியில் மகிழ்ச்சி உதயம் 2. நாமகரணமும் நாற்பது திங்களும் 3. மங்களபுரியின் மூன்று திலகங்கள் 4. ஜீவியச்சுழலில் சோதனையின் கொடுமை 5. புயலும் அமைதியும் 6. குருகுல வாசமும் குமரனின் உள்ளமும் 7. ராஜ்யாபிஷேகமும் ராஜ்யபாரமும் 8. காதல் போதனை —கம்பன் வர்ணனை 9. எதிர்பாராத சம்பவம் 10. அதிர்ச்சியும் வைராக்யமும் 11. இதய ஒலி 12. போர்க்களத்தில் மனப்போர் 13. உணர்ச்சி வெள்ளம் 14. இருண்டவானம் 15. உதய சூரியன். [ஸ்ரீசுத்தானந்தரின் முகவுரையுடன்.]

மதமா, மனமா?

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
இரண்டாவது நவீனம் - ரூ. 1-4-0

1. சேற்றில் முளைத்த செந்தாமரை 2. அகமலர்ச்சியும் ஆபத்தும் 3. பரபரப்பும் பரிதவிப்பும் 4. வாழ்வும் தாழ்வும் 5. சோகமும் வேகமும் 6. இடியும் மின்னலும் 7. பிரசாரமும் விசாரமும் 8. அன்றும் இன்றும் 9. அலறலும் ஆறுதலும் 10. கண்கொள்ளாக் காட்சி 11. விளம்பரமும் விபரீதமும் 12. மனக்கண்ணாடியே உலகம் 13. இன்னலைப் புன்னகைப்போம் 14. உயிர் நிலை — உயர் நிலை 15. பொருள்—அருள்—அமைதி 16. மனதின் சூக்ஷ்மாணுக்கள் 17. அருள் நிலத்தில் அமரானந்தப் பயிர் 18. அவனியில் யாவும் அவனாலே 19. காதல் விளக்கம்—அன்பின் தாயகம் 20. மதமா, மனமா?—மனத்திருவிளையாடல்.

அவஸரமூர்த்தியின் அபூர்வ டயரி

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
மூன்றாவது சித்திரம் - ரூ. 1-8-0

1. நவீன ப்ரஹ்மதேவன் 2. நவீனங்களின் முன்னோர் 3. கடவுள் இருக்கிறார்! 4. பிரமித்துவிட்டோம்! 5. கீர்த்தனமணி! 6. ஒரு வாரம் 7. ஸர்வம் ஸங்கீதமயம் 8. இந்திரனின் புதல்வன் 9. ஸ்ரீ க்ருஷ்ணாம்ருதம் 10. கண்கொள்ளாக் காட்சி 11. அன்பின் ஆற்றல் 12. வாழ்வின் மேடுபள்ளங்கள் 13. எதிர்பாராத அநுபவம் 14. பொன் விழா 15. ஆறுதலும் கிளர்ச்சியும் 16. திருப்பதி யாத்திரை.

84-வது ஜயந்தி

✻

காந்தி ஜயந்தியன்று அண்ணலின் ஆத்மீக, அரசியல் சாதனைகளைக் குறித்தும், அவற்றைவிட இன்னும் முக்கியமாக, அவரது ராம—ராஜ்யக் கனவைக் குறித்துமே நமது சிந்தனை செல்கிறது.

பாரத நாட்டில் ராமராஜ்யம் என்பதுமட்டுமின்றி, இப் பரந்த உலகில் அஹிம்ஸா அடிப்படையில் இன, நிற, தேச, பண வேற்றுமையின்றி மனித சமுதாயம் முழுமைக்கும் ஒரே சர்க்கார் ஏற்படவேண்டுமென்பதே காந்தீயக் கனவின் ஸாராம்சமாகும். (Parliament Of Man and The Federation of The World.)

நம் நாட்டில் ராமராஜ்யம் நிலவவேண்டும் என்று பாபுஜி கூறிய போது அவர் கருத்திற்கொண்டது யாது? ஒவ்வொரு கிராமமும் ஒரு குடியரசாகி, எல்லா அதிகாரமும் கொண்டதாய், சுயசக்தியைக் கொண்டு நிற்கக் கூடியதாயிருக்கவேண்டும், இந்த கிராமப் பஞ்சாயத்தானது உண்மையான வழிகாட்டியாயிருந்து, தன் விஷயங்களைத் தானே நிர்வகித்துக்கொள்ள வல்லதாயும் எவ்விதத் தாக்குதலையும் சமாளிக்கக்கூடியதாயுமிருக்கவேண்டும். ஒவ்வொருவரும் உழைக்கவேண்டும்: உழைத்து, போதுமான சத்துள்ள உணவு பெறுவர். பரஸ்பர உதவி என்பது மனப்பூர்வமான செயலாயிருக்கவேண்டும். இத்தகைய சமூகம் உயர்ந்த பண்பாடுடையதாயிருக்கவேண்டும். உணவு, உடை, வீடு ஆகிய வாழ்க்கையின் அத்யாவச்யத் தேவைகளில் சுயதேவைப் பூர்த்தி பெற்றவையாகவே இருக்கும் இந்நாட்டு கிராமங்கள். சட்டமும் நீதி பரிபாலனமும் லகுவாயிருக்கும். நேர்மையும், கடமையுணர்ச்சியும் சிறந்த கட்டுப்பாடும் கொண்ட போலீஸ் இருக்கும். ராணுவத்திற்கு அவசியமிராது(!) கல்வி முறையின் அடிப்படையே அனுபவ பூர்வமாக மாற்றியமைக்கப்படும். கைத்தொழில்களை அழிக்கக்கூடிய தொழிற் சாலைகள் குறையும். கடைசியாக, இந்த நாடு எளிய முறையில் தனது வாழ்க்கையை நடத்திக்கொண்டு, வெளிநாடுகளிலிருந்து கடன் வாங்காமல், சொந்தவலிமையைக்கொண்டே சுதந்திர நாடாயிருக்கும். இதுதான் காந்தீய நாடு.

உலக சர்க்கார் ஒன்று ஏற்படவேண்டும் என்று கனவு காண்போரை இரு பிரிவினராகப் பிரிக்கலாம்: தத்துவதரிசிகள் (லக்ஷ்யவாதிகள்) என்றும், ப்ரத்யக்ஷதரிசிகள் (காரியவாதிகள்) என்றும். லக்ஷியவாதிகள் கோருவது யாதெனில் உலகனைத்திற்கும் ஜனநாயக அடிப்படையில் தேர்தல் நடத்தி மனித சமுதாயத்திற்கே பொதுவான சட்டசபை ஏற்படுத்தவேண்டும்...உலக நீதிமன்றமும், உலக சமாதான பாதுகாப்புப்படையும் அமைக்கவேண்டும். காரியவாதிகள் கூறுவதாவது— ஐ. நா. ஸபை என்று தற்போதுள்ள ஸ்தாபனமே எல்லா நாடுகளிடையே பரஸ்பர ஒத்துழைப்புடன் உலக ஸபையாக வளர வேண்டும். உலக ராஜ்யங்களில் சுமார் பாதி ரஷ்ய தலைமையின் கீழ் "உலக சர்க்கார்" என்பதற்குப் புறம்பாகவிருக்கின்றதை நாம் உணர வேண்டும். அந்த நாடுகளின் ஒத்துழைப்பின்றி "உலக சர்க்கார்" அல்லது "ஜனசமுதாய சபை" எங்ஙனம் ஏற்பட இயலும்? எல்லா நாடுகளும் ஒன்றுபட்டு தம்மிடையே பரஸ்பர உறவுகளை சட்டபூர்வமாக ஆக்கிக்கொள்ளவேண்டும். (Codification of International Law.) ஒரு ராஜ்யமும் பாக்கியின்றி உலக ஸ்தாபனத்தில் சேரவேண்டும்; விலக அனுமதிக்கக்கூடாது. 12 வருடங்களுக்கு யுத்தம்கூடாது என்று

முதலில் அனைவரும் ஒப்புக்கொண்டு பிறகு அதையே நிரந்தரமாக்கிக்கொள்ளவேண்டும். அந்தந்த நாட்டின் வரவு செலவுக்கிணங்க உலக சர்க்காருக்கு ஒவ்வொருநாடும் நிதி(வரி) செலுத்தவேண்டும். அணுக்குண்டு, கிருமிக்குண்டு முதலியவற்றை சட்ட விரோதமாக்கி உலகினின்று அகற்றவேண்டும். உலகம் முழுமைக்கும் சமாதான அடிப்படையில் பாதுகாப்பு (Collective Security) உறுதியளிக்கப் படவேண்டும்.

டை கனவு நனவாகுமா என்பதே இவ்வருட 84-வது ஜயந்தி சிந்தனை.

—வை. மு. ஸ்ரீ.

தியாகபலி-சரித்திரஜோதி

வை. மு. ஸ்ரீ.

5. பெயரும் புகழும்

❋

"தேஜஸ் ஸிங் என்று சிறப்பான சுபமுகூர்த்தத்தில்தான் பெயர் வைத்திருக்கவேண்டும்; அஸ்து தேவதைகளும் ஆரவாரத்துடன் ததாஸ்து சொல்லி வாழ்த்தியிருக்கவேண்டும். இல்லாவிடில் அப்படி பெயருக்கேற்ற புகழ் வாய்த்திருக்கமுடியுமா?" என்று தொடர்ந்தார் ஸ்ரீமான் வழிகாட்டி.

"சிறு வயதில் காட்டிய வீரதீரபராக்கிரமமும் சரி, பத்து மாத ஆட்சியில் ப்ரகாசப்படுத்திய ராஜ்யஸ்ரீயும் சரி, ஈடுமெடுப்புமின்றி தேஜஸ் மிக்கதாகவே காணப்பட்டது. ராஜகுமாரனுக இருந்தபோது புரிந்த சில வீரச் செயல்களை முதலில் குறிப்பிடுகிறேன்; அவன் முடிசூட்டிய பிறகு நடந்ததைப் பிறகு கூறுகிறேன்." என்ருர்.

ஒரு வேங்கைப் புலி, ஒரு பயங்கரமான சிங்கம், ஒரு அபூர்வமான குதிரை—ஆகிய மூன்றையும் தேஜஸ் ஸிங் வென்ற கதை மிகவும் ரஸமானது; நாம் பெருமைபடக்கூடியது. வீரச்செயல்கள் புரிவதிலேயே அதிக ஆசைகொண்ட அவனுக்கு, பதினுருவது வயது முதலேயே அரிய ஸந்தர்ப்பங்கள் வாய்த்தன.

தனது உயிர்த்தோழன் யகமத்கானுடனும் இன்னும் சில வீரர்களுடனும் ஒருநாள் வேட்டையாடச் சென்றபோது, தேஜஸ் ஸிங் ஒரு அற்புதத்தை நிகழ்த்தினுன். அறுபதடி பாயக்கூடிய வேங்கையொன்று ஒரு வீரனைத் துரத்துவதைக் கண்ட ராஜகுமாரன், தான் நின்றவிடத்திலிருந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். ஆனுல் எதிர்பார்த்தபடி வேங்கையின் மீது பாயமுடியாது பத்தடி குறைவாகவே குதித்தான். ஒரு கணமும் வீணுக்காது ஒரே ஓட்டமாக ஓடி ஈட்டியால் வேங்கையைக் கொன்று வீழ்த்தினுன். அவனது தைரியத்தையும் சாமர்த்தியத்தையும் அனைவரும் மெச்சினார்களெனினும், அவனுக்கு மட்டும் குறிவைத்தபடி பாயமுடியவில்லையே! என்று ஏக்கமும் ஏமாற்றமுமா

யிருந்ததாம்; அதனுல் அதுமுதல் நீண்டதூரம் பாயப் பழக லானுன் அந்த வீரப்புலி.

விஜயதசமி விழாக் கொண்டாடும் சமயம் மன்னன் ஸ்வரூப ஸிங் வீரர்களுக்குப் பரிசளித்துக் கௌரவிப்பது வழக்கம். அவ் வமயம் பற்பலவிடங்களிலிருந்து கைதேர்ந்த வீரர்கள் வந்து தத்தம் திறமையை வெளிப்படுத்தி, தக்க சன்மானம் பெற்றுச் செல்வார்கள். அம்முறையில் ஒரு பிரெஞ்சுக்காரன் ராஜ ஸபைக்கு வந்து, தான் பழக்கியிருக்கும் சிங்கத்தினருகில் யாராவது சென்று அதன் கழுத்தில் கட்டியுள்ள சிவப்புத்துணியைக் கழற்றி வெற்றிகரமாக மீண்டுவந்தால் அந்த வீரனுக்குத் தான் அடிமையாகிவிடுவதாக வீரம் பேசினுன். இரும்புக்கூண்டுக் குள்ளிருந்தபடியே அந்தச்சிங்கம் செய்த பேரிடிபோன்ற கர்ஜனை யைக்கேட்டு அனைவரும் நடுங்கினர்.

"இந்தச் சிங்கத்தையடக்கக் கூடிய வீரன் நமது ராஜ்யத்தில் ஒருவனுமில்லையா?" என்று சபை முழுதும் ஒரு சுற்று சுற்றி நோக்கினுன் மன்னன். "நம் சபையில் அயலான் மார்தட்டி நிற்ப தும், நம்மவர் வாளாவிருப்பதும் இதென்ன நிலைமை? ஒருவரும் முன்வராவிடில் நானே செல்கிறேன்!" என்று தன் வயதைப் பாராமல் ஸ்வரூபஸிங் அந்தக் கூண்டினருகில் சென்றுன். சிங்கம் செய்த ஆர்ப்பாட்டத்தைக்கண்டு தைரியம் குன்றி வருத்தத் துடன் திரும்பினுன். "இந்தக் கம்பிகளில்லையேல் என்னுயிரும் இச்சபையில் இன்னும் பலரது உயிரும் பலியாகியிருக்குமன்ருே!" என்று கலங்கினுன்.

இதனையும், அன்னிய வீரன் குதுகலமாய் நிற்பதையும் கண்ட ராஜகுமாரன் தேஜஸ் ஸிங் கையில் ஈட்டியுடன் கூட்டை யணுகினுன். ஸிம்ம கர்ஜனையைப் பொருட்படுத்தாமல் கூட்டினுட் புகுந்து சிங்கத்தின் முன்புறமாகாதபடி பக்கவாட்டிலேயே நின்று, சிவப்புத்துணியைப் பிடித்துக்கொண்டான். சிங்கம் வாயைத் திறந்தவாறு வளைந்து வளைந்து பாய முற்பட்டதும், அதற்குத் தகுந்தவாறு பக்கவாட்டத்தில் ஒதுங்கியேயிருந்தவாறு, அதன் வாயில் ஈட்டியைச் செலுத்தி அதை அடக்கினுன். அவ்வாறு ஈட்டியை அசைக்காமல் நிறுத்தி, சிவப்புத் துணியைக் கழற்றிக் கொண்டு வெற்றிகரமாக வெளியேறினுன்.

அனைவரும் ஆரவாரம் செய்ய, அரசன் குமரனை உச்சிமோந்து ஆலிங்கனம் செய்து ஆனந்த பாஷ்பம் உதிர்த்தான். பிரெஞ்சு வீரனும் தன் கைத்துப்பாக்கியைப் பரிசாக அளித்து, தான் இனி அடிமை என்று ஒப்புக்கொண்டான். ஆனுல் நமது வீர சிங்கம் என்ன செய்தான்? பரிசைமட்டும் ஏற்றுக்கொண்டு அவனைப் போகவிட்டான். என்னே அவன் தாராளம், பெருந்தன்மை!

"புலியும் சிங்கமும் தான் காட்டு மிருகங்கள்; அவற்றை யடக் கினது வீரச்செயல்தான்: குதிரை யொன்றை யடக்கினுன் என்று புகழ்கிறீரே, அதிலென்ன ப்ரமாதமான அதிசயம்?" என்று நீங்கள் என்னைக் கேட்பீர்கள். அது சாமான்யமான குதிரை யன்று. ஸகலமான வீரர்களையும்—ஸ்வரூபஸிங் உள்பட—அலக்ஷி யப்படுத்தி, தூக்கி எறிந்த அபூர்வமான குதிரை அது. குதிரைப்

பிரியனான மொக்லாய சக்கரவர்த்தி ஷா—ஆலம் என்பவனுக்கு ஒரு வியாபாரி அளித்த தெய்விகக் குதிரை அது.

டில்லி பாதுஷா அதனைத் தனக்குப் பழக்கிக்கொள்வதற்காக முதலில், தனது வீரர்களைச் சவாரிசெய்து பழக்கும்படி நியமித்தான்: ஆனால் ஒருவராலும் அதன் மீதேறி சவாரி செய்ய முடியவில்லை. குதிரை ஸவாரியில் நிபுணனான ஸ்வரூபஸிங்குக்கு அழைப்பு அனுப்பினான்.

மன்னன் ஸ்வரூபஸிங்கை சக்கரவர்த்தி தகுந்த மரியாதையுடன் வரவேற்று, குதிரையைப் பற்றிய வரலாறைச் சொன்னான். அதை அடக்குவதாக வாக்களித்த ரஜபுத்ர வீரன் குதிரையை அணுகினான். மண்டபமெல்லாம் அதிரும்படியாகக் கனைத்துவிட்டு உடலைக் குலுக்கியது அந்தக் குதிரை. ஸ்வரூபஸிங் கையிற் கடிவாளத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு அதன் மீது ஏறினான் ; ஒரேஓட்டமாக ஓடத்தொடங்கி காடு, மலை, மேடு, பள்ளம் எல்லாவிடங்களிலும் திரிந்து, ஸ்வரூபஸிங்கைக் கீழே தள்ளிவிட்டு லாயம் திரும்பியது. எப்பேர்ப்பட்ட குதிரை என்று இப்போது தெரிந்ததா ?

"இதை யடக்கிச் சவாரி செய்யாது செஞ்ஜி திரும்புவதில்லை" என்று பிரதிக்ஞை செய்துகொண்டு டில்லியிலேயே தங்கலானான் ஸ்வரூபஸிங். காலம் உருண்டோடியது, கவலைக்கும் நோய்க்கும் இலக்காகிய அன்னை ராமாபாயைத் தேற்றி தேஜஸ்ஸிங், தான் டில்லி சென்று அந்தப் பாராசாரிக் குதிரையை அடக்கி சவாரி செய்து வெற்றி பெற்று, தந்தையையும் அழைத்து வருவதாகக் கூறினான். "தந்தையின் துயரத்தைப் போக்காத நான் ஒரு மகனா? வீரனா? ராஜகுமாரனா? என்னைத்தடுக்காதே, இப்போதே பிரயாணமாகிறேன்" என்றுகூறி மகமத்கானுடன் புறப்பட்டான்.

குலதெய்வமான ரங்கநாதரைத் தொழுதவண்ணம் பத்து தினங்களில் டில்லிபோய்ச் சேர்ந்தான். தன் தந்தையைக்கூட முதலில் பாராமல் சக்கரவர்த்தியிடம் சென்று தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டு, தனது உறுதியைத் தெரிவித்தான். "எண்ணிறந்த வீரர்களுக்கு அடங்காத அந்தப் பொல்லாத குதிரைக்குச் சிறுவன் நீ ஏனப்பா பலியாகவேண்டும்? நீ வீரக்ஷத்ரியன் என்பது இப்போதே புலனாகிவிட்டது. அதனால் தகுந்த பரிசளிக்கிறேன். ஏற்றுக்கொண்டு உன் தந்தையையும் அழைத்துச் செல்" என்றான் பாதுஷா.

"நான் வெற்றிபெறுவேன், வந்த காரியத்தை முடிக்க என் குலதெய்வம் பலமளிப்பார்" என்று வற்புறுத்தி குதிரையைக் கொண்டுவரச்செய்து, ரங்கநாதரை தியானித்த வண்ணம் அதன் மீதேறினான். அவன் ஏறி உட்கார்ந்த விதத்திலேயே அவனது திறமையைக் குதிரை உணர்ந்துகொண்டது. மனம் போனபடியெல்லாம் அது ஓடியது ; களைப்படையும்வரையில் ஓட்டுமென்றிருந்தான் குமரனும். அவனைத் தள்ள முயற்சித்தது ; ஆனால் அவன் குப்புறப்படுத்துக்கொண்டு கடிவாளத்தைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டான். வெற்றி அவனுடையதுதான் என்று சொல்லவும் வேண்டுமா? அதற்குப் பரிசாக அந்தக் குதிரையே கிடைத்தது வீரனுக்கு! பெயருக்கேற்ற பெருமை; பெருமைக்கேற்ற புகழ்! எல்லாம் தேஜோமயம்!"

"போலி கௌரவம்"

'அம்மா! காய்கறிம்மா! கத்திரிக்காய், வெண்டைக்காய், பச்சை மிளகாய்' என்ற குரல். 'கொஞ்சநேரம் இரு. கைவேலையாக இருக்கிறேன்' என்று சொல்லி வெளியே வந்தேன். 'ஐயா இருக்கிறாரம்மா? அவுங்க வயத்திலே அடிக்கமாட்டாங்க. நீன்னு ஒரே அடியாய் வயத்திலே அடிப்பியேம்மா, என்றாள். ஆம், அவள் கொள்ளை லாபம் அடித்திருக்கிறாளல்லவா.

இது என்னால் வந்த அனர்த்தம்தான். காலைவேளையில் நாலு பக்கமும் வேலைகள் மோதும் பொழுது நாம் எல்லோருடைய உதவியையும் எதிர்பார்க்க வேண்டியவர்களாகத் தானே இருக்கிறோம். அடுப்பு வேலையில் இருக்கும்பொழுது ஒருநாள் என் கணவரை வாசலில் கூவும் காய்கறியை வாங்கச் சொல்லிவிட்டேன். கத்திரிக்காய் 14 அணு, வாழைக்காய் இரண்டணுவென்று வாங்கிவிட்டார். அத்துடன் விட்டால் தேவலையே. கூடைகாரி 1-8-ரூ. சொன்ன கத்திரிக்காயை 14 அணுவுக்கு வாங்கினதாக பெருமை. 3 அணு சொன்ன வாழைக்காயை இரண்டு அணுவுக்கு வாங்கினதாக கிதாப்பு.

கூடைகாரிகளும் பழக்காரர்களும் 4 அணு சாமான் 4 ரூபாய் சொல்லி 6 அணுவுக்குக் கொடுப்பார்களென்று அவர்களுக்குத் தெரிந்தால்தானே? பேசி பிரயோசனம்!

நாய், மனிதனைக் கடித்தது என்றால் அது செய்தி ஆகாது. ஆனால் மனிதன் நாயை கடித்தானென்றால் அது செய்தி ஆகிறதல்லவா? ஆண்களால் ஆகாதது ஒன்றுமில்லையென்று நினைக்கிறார்கள். ஆனால் ஆண்களால் ஆகாதது என்றால் அது ஒரு அரிய விஷயமாகிறது. ஏன், உண்மையைச் சொன்னால்? ஆண்களால் ஆகாதது, பெண்களால் மட்டும் ஆகக்கூடியதென சில வைகள் இருக்கத்தானிருக்கின்றன. சமையல் வேலை, தையல் வேலை, குழந்தைகள் பராமறிப்பு, வீட்டு நிர்வாகம், வீட்டிற்குத் தேவையான கடை சாமான்கள் வாங்குதல், ஜவுளி வாங்குவது, நோயாளிக்குப் பணிவிடை செய்வது இவைகளெல்லாம் ஆண்களால் ஆகாதுதான். ஏன், சகிப்பு தன்மைகூட ஆண்களுக்குப் போதாது...

கடைக்குப் போவது ஆண்களால் முடியாதென்றால் ஆயிரம் கேள்விகள் எழலாம். கடைவியாபாரம் தெரியாதென்று அர்த்தமா? ஜவுளிக்கடையில் எவ்வளவோ ஆண் சிப்பந்திகள் புடவைகளை எல்லாம் ரகரகமாக எடுத்துக்காட்டி சாதுர்யமாகப்பேசி வியாபாரம் செய்யவில்லையா? நாம் அதில் போட்டிருக்கும் விலையைபற்றி சற்று யோசித்தால்கூட பரவாயில்லை. "எடுத்துக் கொள்ளுங்கள்! பணத்தைப்பற்றி என்ன! உங்களைப் போன்றவர்களிடம் சேலை கொடுத்து எங்கள் கடையின் பெருமை அறியபடுத்தணும். பணம் பிரமாதமில்லை. நாளைக்கு ஒரு பேச்சு சேலை நன்றாயில்லையென்றால் அது மனதிற்கு கஷ்டம்; அந்த பேச்சு வராமல் உத்தரவாதமான வியாபாரம் எங்களுடையது'' என்றெல்லாம் சாதுர்யமாகப் பேசி விற்கவில்லையா? பழைய நகைகளை வாங்கி வேறு மாதிரி சற்று மாற்றி கண்ணாடி பெட்டிகளில் வைத்து டடடவளை, ரங்கூன் நெக்லேஸ் என்றெல்லாம் சொல்லி நான்கு பங்கு விலையில் சாமர்த்திய

மாக வியாபாரம் செய்யவில்லையா? ஆண்களால் முடியாது என்று எப்படி சொல்லலாமென்று சகோதரர்கள் சண்டைக்கு வரலாம். அதைப்பற்றி நான் சொல்லவில்லை அதெல்லாம் வியாபார தந்திரம். விற்பதில் காட்டும் சாதுர்யம். நான் சொல்ல முன்வந்தது ஆண்கள் குடும்பத்துக்கு இன்றியமையாத பொருள்கள் வாங்குவதில் பெண்களைவிட குறைந்தவர்களே என்பதுதான்.

சாமான்கள் வாங்குவதில் எவ்வளவோ விதம். நமக்குத்தேவையான சாமான்கள் வேண்டிய சமயத்தில் வாங்குவது ஒன்று. தற்காலத்தில் பெண்களாகிய நாம் எது கிடைக்கிறதோ அதைக்கொண்டு சுவைமிகுந்த பதார்த்தங்களைத் தயாரித்து குழந்தைகளுக்கும் கணவனுக்கும், ஏன் இன்னும் வந்த விருந்தினர்களுக்கும் அளிக்கவேண்டியது நம் பெரும் பொறுப்பாக இருக்கிறது. விலைவாசி இப்படி கோபுரத்தில் இருக்கும் பொழுது சிக்கனத்தையும் எளிமையையும் கையாண்டால்தானே! பொழுது விடிந்தால் ஒவ்வொரு சாமான்கள் ஒளிந்துகொள்ளுகிறது, அவைகளைதேடிபிடித்து வாங்குவது சிரமசாத்தியமாகிறது. நம்முடைய சாமர்த்தியத்தில் கிடைப்பதை வீணாக்காமல் ருசியுடன் செய்கிறோம். ஆண்களால் அது சாத்தியமா? ஒருபடி ரவை கிடைத்தால் அதை சிக்கனமாக வைத்து பத்துநாளைக்கு உபயோகப்படுத்துவோம். ஆண்கள் கீழும் மேலும் கொட்டி திட்டமின்றி செய்து சாப்பிடவும் வழங்காமல்விட்டு போய்விடுவர்.

கடைசாமான் வாங்குவதில் இரண்டாவது நியதி. எதைகூட, குறைய வாங்கலாம்? வாங்கினாலும் கெடாது, எதை கொஞ்சமாக வாங்கணும், எது அதிகநாள் இருக்காது அழுகிவிடுமென்று பெண்களுக்குத்தான் தெரியும். ஆண்களுக்குத் தெரியாது.

ஒரு சமயம் மதுரையில் இருக்கும் என் சித்தி வீட்டிற்குப் போயிருந்தேன். சித்தப்பா பெரிய வக்கீல். மதுரை, ராமநாதபுரம் ஜில்லாக்களில் அவருக்கு நல்ல வருமானம். நான் போயிருக்கும் சமயத்தில் விருதுபட்டி கேஸ் விஷயமாக போயிருந்தார். திரும்பி வரும்பொழுது இரண்டுமூட்டை துவரம்பருப்பு வாங்கி வந்தார். (கக்ஷிகாரன் பணம்கொடுத்திருக்கலாம் தெரியாது).பருப்பு குண்டு குண்டாய் ஒரு கல் மண்ணில்லாமல் மிகவும் ருசியாக இருந்தது. நான் சித்தியிடம் 'சித்தப்பா வீட்டிற்கு வேண்டிய சாமான் வாங்குவதில் கெட்டிக்காரராக இருக்கிறாரே, பருப்பு இரண்டு மூட்டையாகவாங்கினாரே வருஷாந்திரத்திற்குந்தானேஎன்று பெருமையாக சொன்னேன். 'அதற்குள் அப்படி முடிவு செய்யாதே, சித்தப்பா கடை சாமான் வாங்குவதிலும் எது நிறைய தேவை, கொஞ்சம் தேவை; சில நாளிருந்து பார்த்து முடிவுசெய்' என்றாள்.

ஒருவாரத்திற்கு பிறகு சித்தப்பா சாத்தூருக்கு கேஸ் விஷயமாகபோனார்.கேஸ் வெற்றிகரமாக முடிந்ததுபோலும். சித்தப்பா வீட்டிற்குள் வரும்பொழுதே சந்தோஷமாக வந்தார். வேலைக்காரன் இரண்டு கோணி மூட்டைகளை உள்ளே கொண்டு சேர்த்தான்.சித்தியும் நானும் பிரித்துபார்த்தால் அவ்வளவும் கத்திரிக்காய். இரண்டு மூட்டை கத்திரிக்காய்களை என்ன செய்வதென்று ஸ்தம்பித்துவிட்டேன். சாத்தூர் கத்திரிக்காய் ருசியென்றால் இரண்டு மூட்டை,பார்த்தாயா ஜெயா!சித்தப்பா சாமான் வாங்கும்

சாமர்த்தியம் எப்படி? இரண்டு கோணி பருப்பு வருஷாந்திரம் கிடக்கும். இரண்டு கோணி கத்திரிக்காயை நான்கு நாளில் எப்படி சாப்பிடமுடியும்? இதை சித்தப்பாவிடம் சித்தி கேட்கவேயில்லை. வற்றல்போட்டு தெரிந்தவர்களுக்கு கொடுத்து, மார்கெட்டில் பாதிவிலைக்கு விற்று, வீட்டிலும் கத்திரிக்காய் பலரகம் செய்து மூட்டைகளை காலி செய்தாள். அப்பாவி சித்தப்பா இரண்டு மூட்டைகத்திரிகாய் வீட்டிற்கு தேவை தானுக்குமென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்.

நாம் சாமான்களுடைய அவசியத்தை நினைத்து பொருளின் தரத்தை உத்தேசித்து ஒரணு இரண்டணு பார்க்காமல் வாங்குவோம்; அதற்கு சொட்டுசொல்ல ஆண்கள் முன்வருவார்கள். ஐயோ பாவம். அவர்களுக்கு கடுகளவு போவது தெரியும், பூஷனிக்காய் போவது தெரியாது.

என் சிநேகிதி லல்லி அவளுடைய மாமா வீட்டு கல்யாணத்தில் மாமி ஒரு புடவை கொடுத்ததாக காட்டினுள். புடவை மட்டரகம்; நடுவில் பூச்சி அரித்து மக்கிப்போயிருந்தது. இதை மாமி அரைமனதுடன கொடுத்தாள். தீபாவளி சமயமானதால் கடைக்காரர்கள் விற்றுவிடுவார்கள். போனவிலைக்கு கொடுத்துவிட்டு நல்லதாக ஒரு சேலை வாங்கிக்கொள்வதாக தெரிவித்தாள். சாதாரணமாக நான் என் கணவரிடம் உங்கள் கையால்தான் இந்த வருஷம் தீபாவளிக்கு எனக்கு சேலை எடுக்க வேணுமென்று செல்லமாக சொல்லிவிட்டேன். ஒவ்வொரு வருஷமும் அவருக்கு வேண்டிய வேஷ்டி சொக்காய் துணி நான் பணமும் பத்துபெண்ணும் முத்து என்று வாங்குவது வழக்கம். நுணலும் வாயால் கெடுமல்லவா? அன்று ஆபீஸிலிருந்து வந்ததும் உற்சாகமாக என்னிடம் புடவை பொட்டலத்தைக் கொடுத்தார். சந்தோஷமாக வாங்கி பிரித்த நான் அசந்துவிட்டேன். லல்லி தனக்கு வேண்டாமென தள்ளிவிட்ட அந்த ஆகாயகலர் அரக்குகரை சேலைதான். அவரோ பொருக்கி வாங்கியிருபபதறகாக நான்புகழ்ந்துசொல்லும் வார்த்தையை எதிர்பார்த்தார். அழுவதா? சிரிப்பதா? அவருடைய உற்சாகத்தை கெடுக்கவும் என் பெண்ணுள்ளம் முன்வரவில்லை. நன்றுகத்தானிருக்கிறது. நீங்கள் வாங்குவதுகூட மட்டமாக இருக்குமா யென்று அசட்டு சிரிப்புடன் சொன்னேன். ஜெயா! விலை 125 ரூபாய்; போனல் போகட்டுமென்று பணத்தை கொடுத்து தீர்த்துவிட்டேன். இந்த ஊரிலேயே இந்த ஒரு சேலை தான் இவ்வளவு அழகான மோஸ்த்தரில் வந்திருக்கிறதாம் என்றூர். ஆமாம் இந்த ஒரு சேலைதான் இந்த ஊரிலிருக்குமென்று (வேறுபாவத்துடன) நானும் சொல்லிக் கொண்டேன்.

லல்லியை அவள் புடவையை என்ன விலைக்கு விற்ருளென்று அவசரமாகப் போய்க்கேட்டேன். எனக்கு தலையை சுற்றியது: அந்த மக்கலை யார்வாங்குவார்கள்? இனுமாக கொடுத்தால்கூட வாங்கமாட்டார்கள். 30 ரூ-க்கு தள்ளினேனென்ருள். ஹூம். அந்த அழகான சேலையை ஆசை ஆசையாக 125 ரூ கொடுத்து என் கணவர் வாங்கினுர்! வாயை திறக்கவழியில்லை.

என் தம்பி அக்காவுக்கென்று சொக்காய் துணி பம்பாயிலிருந்து வாங்கிவந்தான். அவன் மனதில் அக்காவுக்கு கிடைக்

காத அருமை துணி வாங்கினதாக நினைவு. நம்மூரில் கெஜம் 1 ரூபாய் விற்கும் தலைகாணி சீட்டியை கெஜம் 4–12 கொடுத்து பம்பாயிலிருந்து வாங்கி வந்திருக்கிறான். என்னத்தை சொல்ல?

தினம் விடிந்தால் பக்கத்துவீட்டில் ஒரே கூச்சலாக கேட்கும். சங்கரி அவள் கணவர் வாங்கி வந்த கரிகாய்களை விமரிசனம் செய்வதுதான் அந்தக் கூச்சல். பிஞ்சு பிஞ்சாய் கத்திரிக்காய் சிரிக்கிறது, தளதளன்னு அவரக்காய் கொட்டிக்கிடக்கிறதே. சுவற்றில் ஆணியாக அடிக்கலாம்போல் இந்த கொத்தவரக்காய், மரமாட்டா சிகப்பு கீரைத்தண்டு, நீலம் பரித்துபோன இந்த கச்சை வாழைக்காய் உங்களுக்கென்று எங்கே அகப்பட்டதோ யென்று சங்கரி கத்துவாள். அந்த மனிதர் நீ எப்பொழுதும் இப்படி குற்றம் சொல்லுகிறாய். நீயே வாங்கிக் கொள் என்று கத்துவார்.

சங்கரிமாதிரி கூச்சல் போடுவதில் சாரமில்லை. மேல் நாடுகளில் பெண்கள் கடைக்குப் போய் குடும்பத்துக்குத் தேவையான சாமான்களை வாங்குவது தமது செய்கையாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதுதான் சிறந்த முறை. வீட்டிற்கு தேவைகளை நமக்குத்தான் ஆண்களைவிட நன்றாகத் தெரியும். உரியவிலையும் அளவும் நாம் தான் அறிந்திருக்கிறோம். வெளியில் எவ்வளவோ அலுவல்களுடன் போராடும் அவர்களுக்கு இந்த பொறுப்பைக் கொடுத்து மனத்தாங்கல் அடைவது சரியல்ல. நம் நாட்டில் கடைக்கு பெண்கள் போய் சாமான்கள் வாங்குவது கௌரவக் குறைவென கருதுகிறார்கள்: அந்த போலிகௌரவம் தவறாக வேரூன்றிய எண்ணம். ஆண்களால் ஆகாது கடையில்: நமக்கு வேண்டியதை நாமே போய சரியாக பொறுக்கி வாங்குவோம்.

மகாத்மாஜி ஸேவா சங்கம், திருவல்லிக்கேணி

சங்கத்தில் ஸ்ரீமான் ஸ்ரீரங்கம் சடகோபாசார்யர் ஸ்வாமியால் முறையே குசேல உபாக்யானம், நந்தனர் சரித்திரம், அம்பரீஷ உபாக்யானம், நப்பின்னை பிராட்டி திருக்கல்யாணம் ஆக நான்கு உபன்யாஸங்கள் நான்கு வெள்ளிக்கிழமைகளில் சிறப்பாக நடந்தது. 17—9—52 கவியரசர் பாரதியாரின் தினம் கொண்டாடப்பட்டது. அவ்வமயம் பாரதியார் பாடல் போட்டியும் நடந்தது. 15 வயதுக்குட்பட்ட சிறுமிகள், 15க்கு மேற்பட்டவர்கள் போட்டியில் கலந்துகொண்டார்கள். விழாவுக்கு ஸ்ரீமதி லலிதாபாய் சாமண்ணா அவர்கள் தலைமை வகித்து மிகவும் சிறப்பானமுறையில் நடத்திக்கொடுத்தார்கள். பாட்டுப் போட்டிக்கு ஸ்ரீமதிகள். லலிதாபாய் சாமண்ணா S. வஸந்தா, V. G. கனகம் ஆகிய மூவரும் நீதிபதிகளாயிருந்து மிகவும் திறமையுடன் நடத்தினார்கள். பெரியவர்களில் V. பத்மாவதி முதல் பரிசு. L. கல்யாணி இரண்டாம் பரிசு G. P. கமலா மூன்றாம்பரிசு. சுந்தரா அபிமானப் பரிசும் பெற்றார்கள். சிறுமிகளில் M. N. லக்ஷ்மி முதல் பரிசு. M. N. எதுகிரி இரண்டாம் பரிசு. சிறுமிகள் M. O. தங்கச்சியும் M. N. பரிமளாவும் மூன்றாம் பரிசு. வஸந்தி, அபிமானப்பரிசு.

என் சுய சரிதை

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

B. A., L. T., M. L. C.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

1930

மார்ச்சுமாதம் கவர்னர் மனைவி லேடி ஸ்டான்லி அவர்கள் ஆச்ரமத்தையும் பாடசாலையையும் பார்வையிட்டார். பின் ஒரு நாள் சாரதா வித்தியாலயத்துக்கும் விஜயம் செய்து மாணுக்கிகளின் கதம்பக் கொண்டாட்டத்தைப் பார்த்துக் களித்தார்,

பாடசாலையில் மிஸஸ் கஸின்ஸ் அம்மையார் தலைமையில் விளையாட்டுப் போட்டியும், பரிசளிப்பும் நடந்தது

லேடி வில்லிங்டன், மேரிராணி கல்லூரி இரண்டின் அருகிலுமுள்ள வலைஞர் குழந்தைகள் சுமார் 450 பேர்களுக்கு சருக்கரைப் பொங்கல்வழங்கி பாடசாலை மாணவிகள் ஒரு கதம்பக்கொண்டாட்டமும் நடத்திஞர்கள்.

19-ந்தேதி ஸ்ரீமான் ஸர். சிவஸ்வாமி அய்யர் பாடசாலைக்கு விஜயம் செய்தார்.

27-ந் தேதி டாக்டர் முத்துலக்ஷ்மி அவர்கள் கவுன்ஸில் அங்கத்தினர்களுக்கு தேநீர் விருந்து அளித்தார். பாடசாலையிலிருந்து மாணுக்கிகள் சென்று அங்கு நடந்த கதம்பக் கொண்டாட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஏப்ரல் மாதம் ஸ்ரீமான் நீதிபதி வி. ராமேசம் அவர்கள் தலைமையில் பரிசளிப்புக்கொண்டாட்டம் நடந்தது. ஹைதராபாத்திலிருந்து ஸ்ரீமதி ரஸ்டோம்ஜி பார்டுஞ்ஜி என்பவர் ஆச்ரமத்துக்கு விஜயம் செய்தார். அகில இந்திய மாதர் சங்கம் ஆரம்பமானது முதல் அதன் முன்னேற்றத்துக்காக இடைவிடாத ஊக்கத்துடன் பாடுபடுபவர்.

வழக்கம் போல கவர்மெண்ட் பரீக்ஷைகள் ஸ்கூல்பரீக்ஷைகள் யாவும் முடிந்து ஏப்ரல் 25-ந் தேதி பாடசாலையும் ஆசிரமமும் கோடை விடுமுறைக்காக மூடப்பட்டன.

கோடை விடுமுறை

நீலகிரியைச் சேர்ந்த குன்னூரில் ஸ்டேஷனுக்கு சமீபத்திலேயே Tencriff View என்னும் பங்களாவை வாடகைக்கு எடுத்துக் கொண்டு நாங்கள் எல்லோரும் விடுமுறைக்கு அங்கு சென்ருேம். பிரதிதினமும் காலை மாலைகளில் நீண்ட தூரம் நடப்பது; தோட்டங்கள், அருவிகள், ஊட்டி முதலான இடங்கள் பார்ப்பது இப்படி அமைதியான பொழுது போக்கு. ஒரு நாள் பைகாரா நீர் வீழ்ச்சிக்குப் போய்வந்தோம். அங்கு ஜல வீழ்ச்சி வேகத்தின் உதவியால் காந்த சக்தி தயாரித்து பல ஊர்களுக்கு காந்த விளக்குகள்; ஆலை வேலைகள் இவற்றுக்குக் கொடுக்கின்ருர்கள். அவிடத்து மலை காக்ஷிகள் அவிடத்து தாவரங்கள் எல்லாம் நிரம்ப கவர்ச்சிகரமாயிருந்தன.

என் சகோதரி சாவித்திரிக்கு கிட்னி (Kidney) யில் வலி யுண்டாகி அவிடத்து டாக்டர் உடனே அவளை சென்னைக்கு அழைத்துச்சென்று மேஜர் ஆபரேஷன் செய்தாகவேண்டுமென்று சொன்னபடியால் 14-ந் தேதி ஜூன் மாதமே புறப்பட்டு சென்னை வந்து, ஜனரல் ஆஸ்பத்திரியில் சாவித்திரிக்கு ஒரு மேஜர் ஆபரேஷன் நடந்தது. அவள் உடம்பு சௌக்கியமாகி எப்போதும்போல ஆவதற்கு 2 மாதத்துக்கு மேலாகிவிட்டது. ஜூன் 23-ந் தேதி பாடசாலை ஆசிரமம் திறந்து வழக்கம்போல வேலையாரம்பித்தோம்.

வழக்கம்போல, கான்வகேஷன், பாடசாலை பழைய மாணவிகள் தினம், ஆசிரமத்தின் பழைய மாணவிகள் தினம் எல்லாம் கொண்டாடப்பட்டன.

செப்டம்பர் மாதம் ஒருநாள் உபாத்திமைப்பயிற்சி மாணுக்கிகளை திருவள்ளூருக்குச் சமீபத்திலுள்ள ஈக்காடு (ஈச்சங்காடு என்பது ஈக்காடு என்று சுருக்கமாக மறுவியிருக்கலாமோ?) என்னுமிடத்துக்கு அழைத்துப் போனேம். ஈக்காடு என்பது ஒரு சிறு கிராமம். கிறிஸ்தவ மிஷனரியாரால் அதற்கு மேன்மை ஏற்பட்டது. நாங்கள் அங்கு போன சமயம (22 வருஷங்கள் முன்பு) Miss Tweddle என்பவர் அங்கு தலைவி, ஒரு கைத்தொழில் நிலையத்துக்கு. அவர் சொன்ன வர்த்தமானம் கீழ்வருமாறு: ஐந்தாறு வருஷங்களுக்கு முன்புதான் அந்த அம்மாளும் அவருக்கு உதவியாக சில மிஷனரிகளும் அங்கு வந்து ஒருசின்ன ஓட்டுக் கட்டிடம், 2, 3 கூரைக் கட்டிடங்கள் அமைத்து அந்த கிராமத்துக் குடும்பத்தினர் சிலருக்கு குடிசைத்தொழில்கள், நூல் நூற்பு, நெசவு, தையல், கூடைகள் முடைதல் இப்படி சில வேலைகளை கற்பித்தார்கள். பிறகு நல்ல தேர்ச்சி பெற்ற திறமையானவர்களை புருஷன் மனைவி பெண்கள் பிள்ளைகள் அடங்கிய ஒவ்வொரு குடும்பத்தினரை மத்தியிலுள்ள ஈக்காட்டைச் சுற்றி ஒன்றிரண்டு மைல் தூரங்களிலுள்ள கிராமங்களில் உள்ளவர்களுக்கு கற்பிக்கும்படி அங்கு குடியேற்றினர்கள். எத்தனை ஏழைக் குடும்பங்கள் இவர்களுடைய ஆதரவில் பலவிதமான கைத்தொழில்களைக் கற்றுக்கொண்டு, வேண்டிய உருப்படிகளைச்செய்துகொடுத்து தகுந்த கூலி வாங்கிக்கொண்டு சந்தோஷமாக வசிக்கின்றனர். நான் முதன் முதல் பார்த்தபோது சில கட்டிடங்கள் மாத்திரமேயிருந்தன. போகப்போக இன்னும் அநேகம் கட்டிடங்கள், ஒரு மாதா கோவில், தொழிலாளர்கள் குழந்தைகளுக்கு எலிமெண்டரி பாடசாலை, அங்குள்ளவர்களுக்கு ஒரு வைத்திய ஆஸ்பத்திரி, உத்தியோகஸ்தர்களுக் கெல்லாம் தங்குவதற்கு இல்லங்கள் இப்படியாக ஒருசிறு பட்டணம்போலவே ஆகிவிட்டது. ஜெனரல் ஆஸ்பத்திரி முதலான இடங்களுக்கு வேண்டிய படுக்கைத் துணிகள், ஜன்னல் துணிகள், மேஜை துணிகள், சவுக்கங்கள் இவை யெல்லாம் அங்கிருந்து தான்—இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது அபரிமிதமான உருப்படிகள அங்கிருந்துதான் பல இடங்களுக்கும் அனுப்பப்பட்டன. கிராமங்களில் தங்கி அங்குள்ள ஏழை மக்களுக்கு குடிசைத் தொழில்களைக் கூட்டுறவு முறையில் கற்பிக்க விரும்புகின்றவர்களுக்கு ஈக்காட்டுத் தொழிற் சாலை ஒரு சிறந்த உதாரணம்.

நம் சுதந்திர இந்தியாவில் நம் இந்தியமக்கள் இவ்வித தியாக புத்தியுடன் (மிஷனரி உணர்ச்சியுடன்) கிராமங்களில் தங்கி பாட்டாளி மக்களுக்குப் பணி செய்தால் (ஈக்காட்டு மிஷனரிகளைப் போல) நம்நாடு அதிசீக்கிரத்தில் முன்னேற்றமடையும். பென்ஷன் பெற்று ஓய்வு எடுத்துக்கொள்பவர்கள், பட்டிணங்களிலும் நகரங்களிலும் தங்கும் மோகத்தைவிட்டு கிராமங்களில் தங்கி அங்குள்ளவர்களுக்கு விவசாய காலம் போக மீதியுள்ள காலங்களில் வேறு வருமானத்துக்கு வேண்டிய குடிசைத்தொழில்கள் செய்வதற்கு வேண்டிய வசதிகளைச்செய்து கொடுத்தால் எத்தனையோ உபகாரமாயிருக்கும். நிற்க,

நவம்பர் 22-ந் தேதி அகில இந்திய மாதர் சங்கத்தின் சென்னை கிளைச்சங்கக் கூட்டம் நடைபெற்றது. மியூஸியம் தியேட்டரில் திருவாங்கூர் மகாராணி அவர்கள் தலைமை வகித்து மிக்க அறிவுடனும் திறமையுடனும் நடத்தினர்.

ஸ்ரீசாரதா வித்தியாலயம்

1927-ஆம் வருஷத்தில் ஆரம்பித்த வித்தியாலயம் எதிர்பாராதவிதத்தில் அபிவிருத்தியாகிவிட்டதால் திருவல்லிக்கேணி பெரிய தெருவிலுள்ள ராம் சதனம் என்னும் வீட்டில், வகுப்புக்களையும், ஹாஸ்டலையும் நடத்துவதற்கு வேண்டிய இடமில்லாமல் போய்விட்டது. ஆனமட்டும் திருவல்லிக்கேணியிலேயே வித்தியாலயத்துக்கு சொந்த இடமோ அல்லது பெரிய ஒரு வீடோ வேண்டுமென்று அலைந்து பார்த்தும் இடம் கிடைக்கவில்லை— மேலும் எந்த இடத்திலும் தேகாப்பியாஸத்துக்கும் விளையாட்டுக்கும் வேண்டிய தோட்டமோ திறந்த வெளியிடமோ கிடைக்கவில்லை. ஆகவே 1930 வருஷம் ஜுன் மாதத்தில் மயிலாப்பூர் லஸ் தெருவும் எல்டம் ரோடும் சந்திக்கும் மூலையில் 5 ஏகர் விஸ்தீரமான இடமும் நடுவில் அழகிய Luz House என்னும் பெயருடைய பங்களாவும் வாடகைக்குக் கிடைத்தது. காலஞ்சென்ற ஸ்ரீமான் டாக்டர் ரங்கப்பா அவர்களின் புதல்வி ஸ்ரீமதி யமுனாபாய் B.A. L.T. வித்தியாலயத் தலைவியாகவும் அவருக்கு உதவியாக 10 உபாத்தினிகளும் இருந்தனர். வித்தியாலயம் ஆரம்பித்தபோதே அதில் டிரெயினிங்கு வகுப்பில் சேர்ந்து படித்துமுடித்த ஸ்ரீமதி அம்புஜம்மாள் (ஸ்ரீமான் S. ஸ்ரீநிவாஸய்யங்கார் புதல்வி) "தாமின்புறுவது உலகின்புறக்கண்டு காமுறுவர்" என்பதுபோல வித்தியாலயத்தில் வயதான பெண்கள் படிக்கும் Preparatory வகுப்பை பிரதிதினமும் 3 மணி நேரம் வந்து தானே நடத்தினர். எனக்கு லேடி வெல்லிங்டன் பாடசாலை வேலையும் ஐஸ் ஹவுஸ் வேலையும் நிரம்ப இருந்ததால் அம்புஜம்மாள் அவர்களே அந்த வருஷம் வித்தியாலயத்தின் மேற்பார்வையை ஏற்றுக்கொண்டு மிகுந்த ஊக்கத்துடனும் அபிமானத்துடனும் கவனித்தார். நான் வாரத்தில் ஒரு நாளாவது அங்கேசென்று கவனிக்க வேண்டுமென்பதற்காகவும் பலபெரியோர்களை அழைத்துக் காட்ட வேண்டுமென்பதற்காகவும், சனிக்கிழமை தினம் பாடசாலை வேலை நடக்கும் தினமாயும் ஞாயிறு திங்கள் விடுமுறை தினங்களாகவும் இருந்தன. Preparatory எட்டாவது வகுப்பில் 45 பேர் ஜூனியர் ஸீனியர் டிரெயினிங்கு வகுப்புக்களில் முறையே

23 பேரும் 20 பேரும் இருந்தனர். பிரத்தியேகமான ஒரு தையல் வகுப்பு ஆரம்பித்து Mrs. Maynard என்பவர் தையல் கற்பித்து கவர்மெண்ட் டெக்னிகல் பரிக்ஷைக்குத் தயாரித்து அனுப்பினர்.

ஹாஸ்டலில் ஏறத்தாழ 100 பேர்வரைக்கும் சேர்ந்து விட்டனர். வயதான பெண்களைத் தவிற வெளியூர்களிலிருந்து விவாகமாகாத சிறு பெண்களும் வந்து அவர்கள் செலவுக்கு வேண்டிய பணம் கொடுத்து படித்தனர். செட்டி நாட்டிலிருந்தும் சில செட்டிமார் குடும்பத்துப் பெண்கள் வந்து படித்தனர். வித்தியாலயத்தில் 3-வது பாரம் வரைக்குமே வகுப்புக்கள்; ஆகவே, 3-வது பாரம் முடித்துவிட்ட 10 பெண்கள் ஹாஸ்டலிலிருந்து கொண்டு மயிலை நேஷனல் ஹைஸ்கூலுக்குப் போய் படித்துவிட்டு வந்தனர்.

ஐஸ்ஹவுஸ் ஹாஸ்டல் ஆசிரமத்தில் எனக்கு பணத்தைப் பற்றிய கவலை கிடையாது. அநேகமாய் அங்குள்ள கைம்பெண்கள் எல்லாருக்கும் கவர்மெண்ட் உதவி கிடைத்துக்கொண்டிருந்தது. வித்தியாலயத்தில் மேன்மேலும் வந்து சேர்ந்த ஏழைப் பெண்களுக்கும் பாடசாலை உபாத்தினிகளுக்குத் தேவையான சம்பளத்துக்கும் பணம் மிகுதியாக வேண்டியிருந்தது. செலவும் அதிகமாகிக்கொண்டே வந்தது. 30-வது வருஷம் அக்டோபர் மாதத்தில் லஸ்ஹவுஸிலேயே ஒரு Fancy Sale-ம் மியூஸியம் தியேட்டரில் ஒரு கதம்பக்கொண்டாட்டமும் வைத்து நடத்தினோம்.

அக்டோபர் 10-ந் தேதி Fancy Sale. ஸ்ரீமதி ராஜிவிபாய் சிவராவ், தலைமை உபாத்தினி ஸ்ரீமதி யமுனபாய் இருவரும் அவர்களது சிநேகிதிகள் வித்தியாலய மாணவிகள் இவர்களது உதவியுடன் நூற்றுக்கணக்கான உடுப்புக்கள் தயாரித்து விற்பனைக்கு வைத்தனர். லேடி கிருஷ்ணமாசாரியார், மிஸஸ் பீமஸேனராவ் மிஸஸ் C. ராஜமய்யர், ஸ்ரீமதி ஜானம்மாள், மிஸஸ் ஜயராமய்யர், ஸ்ரீமதி U. S. வாலாம்பாளமமாள், மிஸஸ் P. S. சாவித்திரியம்மாள் இன்னும் அநேகர், அவரவர்கள் வீட்டிலிருந்தே பக்ஷணங்கள் பணியாரங்கள் செய்து கொண்டு வந்து விற்பனைக்கு வைத்தார்கள். மிஸஸ் மாதவராவ் சுதேசி சாமான்கள் புடவைகள் இவைகளை சேகரித்து ஒரு ஸ்டால் வைத்தார். ஈக்காட்டிலிருந்து சுமார் 100 ரூபாய் மதிப்புள்ள Embroidery முதலான அழகிய வேலைப்பாட்டுடன்கூடிய மேஜை விரிப்புக்கள் ஜன்னல் துணிகள், படுக்கை விரிப்புக்கள், தலையணை உரைகள் இவ்வித உருப்படிகளை Miss Tweddle அனுப்பிவைத்தார். அவற்றை லாபம் வைத்து விற்று அந்த லாபத்தொகையை வித்தியாலயத்துக்கு எடுத்துக் கொண்டோம். திருவனந்தபுரம் மகாராணியாரின் செல்வப் புதல்வி மேன்மை தங்கிய லக்ஷ்மிபாய் இளவரசியார் Fancy Sale ஐத்திறந்து வைத்தார். அச்சமயம் மிஸஸ் கஸின்ஸ் அம்மையாரும் மிஸஸ் அம்மு ஸ்வாமிநாதன் அவர்களும் வித்தியாலயத்தைப்பற்றிப் பேசினார்கள். வித்தியாலய அங்கத்தினர்களும் மற்றவர்களும் மிகுந்த ஊக்கம் உத்ஸாகத்துடன் பங்கெடுத்துக்கொண்டது மிகவும் போற்றத்தக்க விஷயமாகும்.

மறுநாள் மியூஸியம் தியேட்டரில் மேன்மை தங்கிய திருவனந்தபுரம் மகாராணியாரின் தலைமையில் ஒரு கதம்பக் கொண்டாட்டம் நடந்தது. பல பெரியோர்கள் இதில் பங்கெடுத்துக் கொண்டனர்,

ஸ்ரீமான் T. M. கிருஷ்ணஸ்வாமி அய்யர் தலைமையில் ஸம்ஸ்கிருதத்தில் பிரார்த்தனை. மிஸஸ் கஸின்ஸ் அம்மையார் பியானுவிலும் மிஸஸ் சடோபாத்யாயா பிடிலிலும் சேர்ந்து ஒரு Duet சங்கீதம், ஸ்ரீமான் ஹரீன் சடோபாத்யாவும் அவர் சகாக்களுமாக ஒருசிறிய சங்கீத நாடகம். ஞான சாகர ராவ் புல்லாங் குழலும் செல்லப் பய்யர் பிடிலுமாக ஒரு சங்கீதம். லேடி கிருஷ்ணனுடைய புதல்வி ஸ்ரீமதி ஸுமங்கலாவின் நடனம். P. T. ஸ்கூலிலிருந்து ஒரு அழகிய Ribbon Dance நளதமயந்தியிலிருந்து சில காக்ஷிகள். இப்படியாக கொண்டாட்டம் மிக சிறந்ததாயும் பார்ப்பவர்களை பரவசப்படுத்துவதாயுமிருந்தது. சகோதரி சுபலக்ஷ்மி வித்தியாலயத்தின் அபிவிருத்தியைக் குறித்து ஒரு அறிக்கையைப் படித்தார். மகாராணியவர்கள் வித்தியாலயத்தைப்பற்றிப் புகழ்ந்து சில வார்த்தைகள் கூறினர். ஸ்ரீமான் ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யர் அவர்கள் வந்தனோபசாரம் கூறினர். பரீக்ஷையில் தேர்ச்சியடைந்த வித்தியாலய மாணவிகளுக்கு பரிசுகள் அளிக்கப்பட்டன. அவற்றுள் முக்யமானவை (ஜில்லா ஜட்ஜ்) ஸ்ரீமான் P.ராஜகோபாலாச்சாரியாரால் ஏற்படுத்தப்பட்ட Popularity Prize ஸ்ரீமதி அம்புஜம்மாளுக்கு அளிக்கப்பட்டது. ஸ்ரீமான் V.நடராஜன் அவர்களால் அவரது பெற்றோர்கள் ஞாபகார்த்தமாக ஏற்படுத்தியுள்ள Endowment தொகை வட்டியிலிருந்து 3 பரிசுகள். 2 நாட்களிலும் சேர்ந்த தொகை கிட்டத்தட்ட ரூ 2000.

Madras Officials Association அங்கத்தினர்கள் வித்தியாலய உதவிக்காக பல்லாரியில் 2 நாட்கள் நாடகம் நடித்து சேர்த்துக் கொடுத்த தொகை ரூ 1841. கவர்மெண்டிலிருந்து முதன் முதலாக ரூ 1780 கிராண்டும் கிடைத்தது.

கல்கத்தா N. R. ஐயரவர்களின் புதல்வர் ராம்ஜீதாஸ் அய்யர் 1300 ரூபாய் தொகையை ஒரு Endowment வைத்து அதன் வட்டித் தொகையை வருஷா வருஷம், கூடுமானல் சித்தூர் ஜில்லாவிலிருந்து வரும் ஒரு ஏழை மாணவிக்கு, கொடுக்கவேண்டும் என்றும் நிபந்தனையும் ஏற்படுத்தினர், (தொடரும்)

அபூர்வ ராமாயணம்

ஜகன்மோகினி பத்திரிகைவாயிலாக வெளியிடப்பட்டு, தனி நூலாக அச்சிடுவிக்கப்பட்டது. 160 பக்கங்கள் ரூ 1—8—0

யோகி சுத்தானந்த பாரதியார் இயற்றிய

காந்தி கீர்த்தனம்

350 பக்கங்கள். ரூ. 3—8—0.

உயரிய கிளேஸ் புதிப்பு.

இதைப் படித்தால் வாழ்க்கை புனிதமுறும்; சக்திபெறும்.

இப் பதிப்பின் லாபம் மகாத்மாஜி சேவா சங்க

இலவசச் சம்பள நிதிக்கே

மதிப்புரை

ஸ்ரீ. ரேணுகா தேவி சரித்திரம்.

[ஆசிரியை—ஸ்ரீ. டி. நரசம்மாள், 175 திருவத்தியூர் ஹைரோட், சென்னை. விலை 1 ரூபாய்.]

கடவுளைப் பற்றிப் பலவகையானக் கொள்கைகள் பரவி வரும் இக்காலத்தில் ஸ்ரீ. டி. நரசம்மாள் எழுதிய ரேணுகா தேவி சரித்திரம் போன்ற நூல்கள் வரவேற்று ஆதரிக்கத் தக்கனவாகும். நூலின் அமைப்பு, எளிய நடை, குறைந்த விலை முதலியவை இந்நூலை ஒவ்வொரு இல்லத்திலும் இன்றிய மையாத பொருள்களில் ஒன்றாக்குகின்றன. புத்தகத்தின் மேல் அமைந்துள்ள ஸ்ரீ ரேணுகையின் அழகிய உருவமானது காண்பவருக்கு ஒருவித இன்பத்தை ஊட்டி அழகுணரும் ஆற்றலைத் தூண்டுவதாகும் இந்நூலானது பக்தியோடு படிப் பவருக்கு ஒரு அருள் பிரசாதமாகவும், கதைப் பகுதியில் ஈடு படுவோருக்கு ஒரு சிறந்த பொழுது போக்காகவும் அமைந் துள்ளது. நவராத்திரி முதலிய விசேடகாலங்களில் பெண்களும் குழந்தைகளும் படித்தும், படிக்கக் கேட்டும் இன்புறத் தக்க ஒரு சிறந்த நூலாகும். வாசக சாலைகளிலும், முதியோர் கல்வி நிலையங்களிலும் இடம்பெறுதல் வேண்டும். இந்நூலானது ஒரு குலமகள் பெற்றோரிடமும், கணவனிடமும் நண்பரிடமும் எவ்வாறு ஒழுகுதல் வேண்டுமென்று தெளிவாகக் குறிக்கின்றது மேலும்,

"தந்தை சொல் மிக்க மந்திரமில்லை"
"தாயிற் சிறந்த தொரு கோவிலுமில்லை"

என்னும் கருத்துக்களும் இதில் பரவியிருக்கக் காணலாம்.

விரும்பியார் விரும்பிய வடிவில் வந்து அருள் புரிவதாகக் கூறிய கண்ணன் இக்கலியுகத்தில் பராசக்தியின் வடிவமான ஸ்ரீ ரேணுகா தேவியின் மூலமாக அருள்புரிவதைக் காணலாம். உதாரணமாக ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரும், தேசிய கவி பாரதியாரும் பார்வதி தேவியின் அருள் பிரசாதத்தினாலேயே உய்ந்தனர் என்னும் வரலாறும் இவருடைய பெருமைக்குச் சான்று பகரும். எல்லா வல்லமையும் வாய்க்கப்பெற்ற இறைவி யானவள் பசி, பிணி, போர் முதலிய கொடுமைகளை நீக்கி, உலக மக்கள் அனைவரும் ஒன்றுபட்டு இன்ப வாழ்வு எய்து தற்கு அருள் புரிவாளாக! ஒன்பது உட் பிரிவுகளோடு கூடிய இந்நூலைக் கசடறக் கற்போர் நவசக்திகளின் நற்றுணை வாய்க் கப் பெற்று நிலமிசை நீடு வாழ்வார்களென்பது திண்ணம். ஓங்குக அருள் நெறி! வாழ்க வையகம்!

—ஸ்ரீமதி இராஜரத்தினம், M. A., L. T.
(தமிழ்ப் பேராசிரியை,
ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி,
திருவல்லிக்கேணி.)

ஏ. ராஜம்மாள்

ராகமாலிகை

இராமாநுச நூற்றந்தாதி

தாளம்: ரூபகம்

ஹுஸேனி

த்ரு	லகு	த்ரு	லகு	த்ரு	லகு	த்ரு	லகு
1. ஸா ஸா	ரீ நீ—ஸாஸா	ஸா ஸா	பாபா- தாமா	பா பா	நீதா—நீ நீ	ரிஸநித	பாபா-தாமா ‖
பூ :	மன்—னு . .	மா .	‖ துபொ-ரு . ந்	தி ய	மார்—ப ன்	பு . கழ்	மலி—ந் த ‖
பா பா	நீதா- நீ நீ	ஸ்ஸ்ரிஸ	ரிம்கரி-ஸா ஸா	ஸ ரி க ரி	நிஸரிஸ-நிதபா	பநிதப	மகமப-மகரிஸ ‖
பா .	மன்—னு .	மா . .	ற.ன.-டி . . .	ப . ணிந்	துய்..-ந்த . வன்	பல் . .	க.லை. -யோ.ர் ‖
பா பா	நீதா- நீ நீ	ஸாஸா	ஸாஸா-ஸா ஸநி	தநிஸா	ரீகாமாபம-கரிஸா	ஸரிகரி	நிஸரிஸ-நிதபம ‖
தா ம்	மன்— ன .	வந்	த வி—ரா . .	.மா . . .	நு.ச.ன்-ச . ர	ணா . . .	ர . . . —விந்தம் ‖
பா பா	ரிமகரி-ஸாஸா	நீநீ	ரிஸநித-பா மா	பா பா	ஸநிஸப பநிதப	மகமப	தப.மப-ம.கரிஸ ‖
தாம்	மன்னி-வா .	மூ .	நெஞ். -சே . .	சொல்	லு.வோ ம.வன்	கா . .	மங்க.-..ளே. ‖

மணிரங்கு

த்ரு	லகு	த்ரு	லகு	த்ரு	லகு	த்ரு	லகு
2. ரீ ரீ	மாபா- பா பா	மா தா .	பமகா—ரீ ஸா	ரீ நீ	ஸாஸா—ஸாஸா	ரிமபநி	பமகா-ககரிஸ ‖
பே	ரியல்-. நெஞ் . .	சே .	அ டி—ப ணிந்	தே .	னுன்—னை . .	பே.ய்	பி.ற.-- . வி . . ‖
ரீமரி	மாபா.பா பா	நிநிபம	மா மா—மாமா	பா பா	நீபா—பா நீ	பா நீ	ஸாநீ--ஸாஸா ‖
பூ . .	ரி ய—ரோ . .	டு ள் . .	ள . —சு .	ற் ற ம்	பு ல— . த் தி	பொரு	வரும்.-சீ ர் ‖
பா பா	நீபா-- நீ நீ	ஸாஸா	பா நீ—ஸா ரீ	ரிம பம	பமகா-க ரி ரீ	ஸாஸா	ஸநிபா நீ நீ ‖
ஆ .	ரியன்—செம்	மை யி	ரா . —மா .	நு . ச .	மு.னிக் க ன்	பு . .	செய்.,-யு ம் ‖
ரீ ரீ	ஸாஸா ரிஸ நீ	ஸநிபா	மாமா--பா நீ	ஸ ரீ ஸ	‖ நிஸாநி-பாபா	பநிஸநி	பமகா—ககரிஸ ‖
சீ .	ரி ய—பே . .	று . டை	யார் —அ டி	கி .	ழெ....னை -	சே . ர்	த்ததற் கே . ‖

மால்கோஸ்

3 ஸாஸா	மாமா—மாமா	மாமா	மககா — காகா	கமாக	மததம-தநிநித	நீ நீ	ஸாஸா—நிதநீ
ஆ .	ரெனக்-கிருன்	கிகர்	சொல்— வில்	மா . .	யன் —றை...	வர்	தெய் — வ . .
ஸ்ஸ்க்க்	ஸாஸா—நீ நிஸ	ஸநிநித	தாமா .--கமதநி	ஸகமக	ஸநிநிஸ-ஸநிநித	தநிநித	மாமா-கமகஸ
தே . .	ரினில் — செப்	பி . ய .	கி . -தையின்	செம் . .	மை.பொ-.ரு.ள்	தெ . .	. . — ரி.ய.
ம்ாம்ா	நீதா — தாநி	ஸாஸா	ஸஸகக— ஸநிநீ	நீ ஸா	காஸா —ஸாகா	மாமா	காகா—மாமா
பா .	ரினில் -சொன்	ன வி	ரா.. — மா .	நுச	னப் —ப ணி	யு ம்	கல்.. —லோர்
ம்ாம்ா	கமகஸ-நீ நிஸ	ஸநிநித	தாதநி -ஸாஸா	ஸகமக	ஸநிநிஸ-ஸநிநித	தநிநித	மாமா-கமகஸ
ரி .	ரி.னில்-சென்	று . ப.	ணித.--து என்	ஞ . . .	வி . யு.— .. சிந்	தை . .	யு -—மே ...

மாயாமா ளவகௌளா

4 ஸாஸரி	மகரீ — ரீ ரீ	கமமா	மாமா —பமகா	கா மா	பாபா —தாதா	பாபத	தபமப--பமகா
நின் .	ற . .— வண்	கிர்	த்தியும் — நீ. ள்	புன	லும் — நிறை	வே . .	ங்க...— ட . . .
காகம	பாபத-தபமா	கமபத	பமகம --கரிஸநி	ஸாஸரி	மககரி— ரீ ரீ	காமா	மாமப—பாமகா
பொற்குன்	ற .— மு . ம்	வைகுந்	த . நா—. டு. ம்	கு . ல	வி ... — ய .	பார்	க.ட.—லு . ம்
பாபா	தநிஸநி-தாபா	மாபா	பமகா —மாமா	பமதப	தாதா— நீ நீ	ரீ ரீ	ரீஸ்ா -ஸ்ாஸ்ா
உன்	த... — னக்கெ	த்தனை	யின் —பம்	த . ரும்	உன் — னிணை	மலர்	தா — . ள்
பாதா	நிஸரிக- ரீரிஸ	ஸநிரிஸ	நிதபா— தநிஸா	ஸநிஸரி	ஸநிதா— பாதா	நிஸநித	பமகம-கரீஸ
எங்	த... — . ண.	க்கு . .	. . ம — . . து	ரா . .	மா .— நுசா	இவை ஈ	ங்.தரு— . ளே

ரீதி கௌளா

5. நீநி	நிததா-மாமா	காமாபா தப	பமகரி-ஸாஸா	நிஸநிப	நீஸா — கா ஸா	ஸா கா	மாகா--மாமா
இருப்	பி . —டம்வை	குந் . . .	தம். .—வெங்	க . டம்	மா —வி ரு	ஞ்சோ.	லைஎன்—னும்
ஸாஸா	நிஸநிப-பா பா	நீ நீ	ஸாஸா-ரிகரிஸ	நீ நீ	ஸாகா--கா ஸா	[illegible] கா	மாகா--மாமா
பொருப்	பி ... — டம் .	மா .	யனுக்--கென். .	பர்	கல் —லோர்	அவை	தன். —றேடும்
மாமக	மா நீ—தா மா	தாதநி	ஸ்ாஸ்ா--ஸ்ாஸ்நி	நிநிகக	ரீகாமாபம கரிஸா	நீ பா	நீநீ —ஸாஸா
வந்திரு	ப் பி—ட ம்	மா .	யனி —ரா . .	மா . .	நு.சன்.-ம ன	த்தின்	ற . —வன்
நிநிகரி	ஸாஸா-ஸாஸா	நீ பா.	நீ நீ —ஸாஸநி	தா நித	நீரிஸ — நிதமா	காமாபதபாபம-கரிகாகா.	
வந்திரு	ப்பி —ட ம் .	எங்	த . —னி த	யத் .	துள். —ளே. த	னக் கின்	பு . —றவே.

மாசு நீங்கியது.

மாலையில் ஆபீஸிலிருந்து வீடுதிரும்பிய மணி, தன் உடுப்புகளை களைந்துவிட்டு கூடத்தில் வந்தமர்ந்தான். அவன் தாய் காமாக்ஷி அம்மாள் கொண்டுவந்த காப்பி டம்ளரை கையில் வாங்கிக்கொண்டு,

"அம்மா! நான் வேறு வீடு பார்த்து, இன்னும் இரண்டு நாளில் வருவதாகச் சொல்லி, அட்வான்ஸூம், கொடுத்துவிட்டேன். அப்பாவிடம் சொல்லிவிடு" என்றான், கண்டிப்பும் உறுதியும் நிறைந்த குரலில்.

திகைப்படைந்த காமாக்ஷி, சில நிமிஷங்கள் எதுவுமே பேசாமல் மணியைப் பார்த்தவாறே நின்றாள். அவன் மேலே எதுவும் பேசவில்லை. காமாக்ஷி நயமாக,

மணி, இதோபார்! நீ இப்பொ தனியாக குடித்தனம் போகும்படி இந்த வீட்டில் உனக்கு என்ன கஷ்டமாக இருக்கிறது? வீணாக பிடிவாதம் பிடிக்காதே. சொந்தவீடு இருக்கும் போது ஒரே ஊரில் தாய் தகப்பனார் வேறு, பிள்ளை நாட்டுப் பெண் வேறாக இரண்டு குடித்தனம் வைத்தால் பார்ப்பவர்கள் தான் என்ன நினைப்பார்கள்? எங்களுக்குத்தான் மனது கேழ்க்குமா? என்றாள்.

மணி, அம்மா! உனக்கும் விமலாவுக்கும் கொஞ்சம்கூட ஒத்துக்கொள்ளமாட்டேங்கிறது. "அது ஆசாரம் இது அனாசாரம், அதை என் அப்படிச் செய்தாய்? இதை இப்படிச் செய்வதற்கென்ன? என்று சதா நீயும்தொணப்பிக்கொண்டிருக்கிறாய். தற்கால நாகரீகப்படி இருக்கும்விமலாவுக்கும்காலத்தை அனுசரித்து நடக்கத் தெரியாது; கர்னாடக கட்டுப் பெட்டியாக இருக்கும் உனக்கும் அடிக்கடி ஏதாவது தகராறு வந்துகொண்டே இருக்கிறது. ஒருவருக்கொருவர் ஒற்றுமை இல்லாமல் எப்பொழுதும் மனஸ்தாபத்துடன் எலியும் பூனையும்போல ஒரே வீட்டிலிருந்து சண்டை விருத்தியாவதைவிட தனியாக இருப்பதே மேல், என்றுதான் இந்த முடிவுசெய்து வீடுபார்த்து அட்வான்ஸூம் கொடுத்தேன். ஒவ்வொருவர் குடும்பத்திலும் எவ்வளவோ இருக்கும்; அதற்காக பிறருக்கு பயப்படமுடியுமா?" என்று சொல்லிவிட்டு தன்னறைக்குப் போய்விட்டான்.

காமாக்ஷியின் மனம் வேதனை அடைந்து கண்களில் நீர் ததும்பியது. இரண்டு குழந்தைகள் இறந்த பிறகு, மூன்றாவதாக பிறந்த மணியை காமாக்ஷியும் கிருஷ்ணமூர்த்தியும் எவ்வளவோ அருமை பெருமையாக வளர்த்தனர். அவனுக்குப் பிறகும் சில இறந்துவிட்டன. முன்னும் பின்னும் இறந்தவை போக கடவுள் கிருபையால் மிஞ்சிய மணியையும் அவன்

தங்கை இந்திரா தம்பி பாலுவையும் முகம் கோணசகியாமல் மிகவும் செல்வாக்காக வளர்த்தார்கள்.

கிருஷ்ணமூர்த்தி போஸ்டுமாஸ்டர் வேலையிலிருந்தார். சொந்தவீடு ஒன்றும் கிராமத்தில் சிறிது நிலமும் இருந்தது. ஆகவே குடும்பத்தில் அதிக வறுமை தலைகாட்டாமலும், கஷ்டமில்லாமலும் இருந்தது. மணி செல்லப்பிள்ளையாகவளர்ந்தாலும் சூடிகையாகவும் உத்சாகமாகவும் படித்து பீ. எஸ். ஸி. முடித்தான். தனலக்ஷ்மி பாங்கியில் காஷியர் வேலையில் அமர்ந்தான். கிருஷ்ணமூர்த்தி பெண் இந்திராவையும் ஒரு நல்ல இடத்தில் தம் சக்திக்கும் மீறியே செலவழித்து கல்யாணம் செய்து கொடுத்தார். பாலு படித்துக்கொண்டிருந்தான்.

நல்லபடிப்பு வேலை அழகு முதலிய சகலமும் பொருந்தியிருந்த மணிக்கு கல்யாண மார்க்கெட்டில் அதிக கிராக்கியும் மதிப்பும் இருந்தது.

மணி காலேஜில் படிக்கும் போதிலிருந்தே, மிகவும் சுரு சுருப்பாகவும் எதிலும் முதன்மை ஸ்தானத்திலும் உள்ள மணிமீது, அவன் பிரின்ஸ்பால் ஒரு கண் வைத்திருந்தார். தன் இளைய பெண்ணை அவனுக்கு கொடுத்து, மாப்பிள்ளையாக்கிக்கொள்ள எண்ணினார். அவருக்கு இரண்டு பெண்களும், இரண்டுபிள்ளைகளும். மூத்தபெண்ணைக் கொடுத்த இடத்தில் அவர்களைத் திருப்திப்படுத்த அன்றுமுதல் இதுவரை, எவ்வளவோ சீர் சிறப்பு செய்தும், பணத்திமிரால் கர்வமுடையவர்களும் பொல்லாதவர்களுமான அந்த மாப்பிள்ளை சம்மந்திகளிடம், பெண்ணும் இவர்களும் அடைந்த சிறுமையினாலும் சிரமத்தாலும் அவர் மனம்கசந்துவிட்டது. ஆகவேகொஞ்சம் ஏழ்மையாக இருந்தாலும் படித்து முன்னேறி நல்ல வேலையும் கண்ணிற்கு லக்ஷணமாகவும், கம்பீரமாகவும் உடைய தோற்றமும் சாந்தமும் பெருந்தன்மையும் நிறைந்த குணமும், உள்ள மணியை மருமகனுக்கிக்கொள்ள முயன்றார்.

காமாக்ஷி, கிருஷ்ணமூர்த்தி, இந்த சம்மந்தத்திற்கு இசையவில்லை. பெரிய மனிதர்கள் வீட்டில் அருமையாக வளர்ந்த பெண் தங்கள் குடும்பத்திற்கேற்ற முறையில் அடங்கிய சரக்காக இருக்குமா? தங்களுடன் ஒற்றுமையாகவும் மரியாதையாகவும் பழகுவாளா? பெரிய இடத்து சம்மந்தம், விபரீத வேதனையை விலைகொடுத்து வாங்கினாற்போல முடிந்தால் என்ன செய்வது? என்றெல்லாம் யோசித்து தயங்கினார்கள். ஆனால் பிரின்ஸ்பாலின் தேன் சொட்டும், இனிமையான பேச்சில் கட்டுப்பட்டும் விமலாவின் அழகு, பாட்டு, முதலியவைகளிலும் மயங்கிய மணி, அவளையே மணக்கவிரும்பினான். பிள்ளையின் இஷ்டவிரோதமாக நடந்து அவன் மனம் வருந்த சகியாத காமாக்ஷியின் வற்புறுத்தலால், கிருஷ்ணமூர்த்தியும் ஒருவாறு இசையவே விமலா—மணி கல்யாணம் மிகுந்த ஆடம்பரத்துடன் நடந்தது.

ஏராள வெள்ளி, எவர்ஸில்வர் பாத்திரங்களும், மர சாமான்களும் போர்டபில் டைப்மெஷின், ரேடியோ, முதலிய ஆடம்பர சீர்வகைகளுடன் உடலில் தங்க நகை, வைர நகைகளும் குலுங்க பொற்கொடி போன்ற அழகிய விமலாவை, மணிமனைவியாக அடைந்ததைக்கண்டு காமாக்ஷி மகிழ்ந்தாள். பிரின்ஸ்பால் தம்பதிகளும் அவர்களை மரியாதையாகவே நடத்தினர்கள். விமலாவும் புக்ககம் வந்து சேர்ந்தாள்.

வீட்டுக்காரியங்கள் எதிலும் பழக்கமில்லாத விமலாவுக்கு புக்ககம் வந்ததும், எல்லாம் புதுமையாகவும் மலைப்பாகவும் தோன்றின. காமாக்ஷி விமலாவை மிகவும் அன்பாகவும் ஆசையாகவும் நடத்தினள். தெரியாதவைகளை நயமாகவும் அன்பாகவும், அவள் மனதில் படும்படி சொல்லிக்கொடுப்பாள். கடைசிப்பெண் என்ற காரணத்தால், அவள் வீட்டில் எல்லோருக்கும் விமலாவிடம் தனி அன்பு ஆதலால் விசேஷ சலுகையும் உண்டு. புக்ககத்தைவிட பிறந்தகம் பணக்கார இடம், தனக்கு செல்வாக்கு அதிகம் என்ற கர்வமும் பெருமையும் அவள் மனதில் குடிகொண்டதால், மாமியார், நாத்தனர், முதலிய புக்ககத்து மனிதர்களை மதித்து சகஜமாக நடக்கவோ பழகவோ இல்லை.

எது எப்படியானுலும் விமலாவிற்கு, வாரம் ஒரு சினிமாவுக்கும் கச்சேரிக்கும் போகாவிட்டால், தூக்கம் வராது. நினைத்தது நினைத்தபடி, பிறந்தகம் போய்விடுவாள். மாதத்தில் 15-தினங்கள் பிறந்தவீட்டில்தான் இருப்பாள் விமலா. குடும்பவேலைகளில் காமாக்ஷிக்கு உதவியாக பொறுப்பும் பங்கும் எடுத்துக்கொள்வதோ, கவனிப்பதோ இல்லை. அவளுடைய ஆடம்பரமான செலவுகளையும், தங்களை மதிக்காத அவள் போக்கையும் கண்ட காமாக்ஷி, மனம்வருந்திலுைம், ஏதோ செல்லமாக வளர்ந்தவள், சிறுவயது, நாளடைவில் தானே திருந்திவிடுவாள் என்று அதை பாராட்டவில்லை.

விமலா கர்ப்பமானுள். வளைகாப்பு, சீமந்தம், விமரிசையாக நடந்தது. சில நாட்களில் அழகிய ஆண் குழந்தையும் பிறந்தது. சிறுவயதிலிருந்தே சின்னக்குழந்தைகளிடம் ஆசையுள்ள மணி சீக்கிரமே விமலாவையும், குழந்தையுடன் அழைத்துவந்துவிட்டான். மொழுமொழுவென்ற சிவந்த உடலும், நெற்றியில் வந்துவிழும் அழகிய மயிர்ச்சுருள்களும், குறுகுறுப்பான கருநீல விழிகளையும் உடைய அந்தக் குழந்தையை வீட்டில் ஒருவர்மாற்றி ஒருவர் தூக்கிவைத்துக் கொண்டு கொஞ்சுவார்கள்.

விமலாவின் எடுத்தெறிவதுபோன்ற பேச்சும், கர்வமும், நாளுக்குநாள் முற்றிவந்ததே தவிர குறையவில்லை. இந்திராவிற்கு குடும்பவேலைகளில் உள்ள திறமையும், சிக்கனத்தையும், எல்லாரிடமும் சகஜமாக களங்கமற்று பழகும் அவள் குணத்தையும், புக்ககத்தில் அவளுக்குள்ள செல்வாக்கையும்பற்றி

காமாக்ஷி பெருமையாக பேசும்போதெல்லாம் மறைமுகமாக தன்னை தூஷிப்பதாகவே எண்ணி விமலா மனங் குமுறுவாள்.

ஆஸ்த்மாவியாதியினுல், காமாக்ஷியின் உடல் சிறுது பலஹீனமடைந்திருந்தும், ஆசார நியமங்களிலோ விரதங்கள் கொண்டாடுவதிலோ தளர மாட்டாள். எவ்வளவு வேலை இருந்தாலும் பிறரை எதிர்பாராமல் தானே செய்வதுதான் வழக்கம். ஆனுல் சில அவசர சமயங்களிலும், விசேஷ காலங் களிலும், விமலாவும் ஏதாவது செய்ய நேரும்போது, அதை அப்படிச்செய், இதை இப்படிச்செய் என்று குற்றங்குறை களிருந்தால் நயமாகவும், சகஜமாகவும் கூறி திருத்துவாள்.

ஏற்கெனவே இவர்களிடம், மதிப்பின்றி இருந்த விமலா விற்கு தான் அடிக்கடி பிறந்தகம் போவதை இவர்கள் ஆக்ஷே பிப்பதோ, தான் செய்யும் வேலைகளில் குறைகள் கூறுவதோ, கட்டோடு பிடிக்கவில்லை. ஆதிமுதலே மாமனுர், மாமியார் முதலியவர்களை, ஒரு கட்டுக்காவலாகவும் தொந்தரவாகவும் கருதிய அவள், ஒருவித நிர்ப்பந்தமுமில்லாமல், சுதந்திரமாகத் தனிக்குடித்தனம்செய்யவிரும்பினுள். கல்யாணமான சிலநாட்க ளிலேயே கருப்பமாகிவிட்டதால் அந்தப் பேச்செடுக்க சந் தர்ப்பம் எழவில்லை. மறைந்துகிடந்த ஆசை இப்போது துளிர்விட ஆரம்பித்தது. தன் பெற்றோர்கள் சம்மதிக்க மாட்டார்களென்று மணிக்கு தெரியும். அவனுக்கும் அதில் விருப்பமில்லை ஆகவே விமலாவின் ஆத்திரம் புரை ஓடியது. அவளை நினைத்து உரலை இடிப்பதுபோல, ஒவ்வொரு விஷயத் திலும், மனஸ்தாபமும், சச்சரவும், ஏற்பட ஆரம்பித்தது. காமாக்ஷி எதுவும் அவனிடம் கூருவிட்டாலும், விமலாவின் அழுது சிவந்த முகமும் பேச்சும், மணிக்கும், ஆத்திரத்தைக் கிளப்பி தன் தாயிடம் சச்சரவிடவைத்தது.

ஆடம்பரமற்ற எளிய நிலைமையில், அமைதியாகவும், சந் தோஷமாகவும் இருந்த அந்தக் குடும்பத்தில் விமலாவின் வரு கையால், ஒரு சிறு பிளவு தோன்றியது அந்தப் பிளவும் நாளடைவில் விசுவரூபமெடுத்து வந்தது. பெரியஇடத்துப் பெண்ணுன விமலாவின் போக்கைக்கண்டு, இப்படி ஏதாவது ஒரு விபரீதத்தில்தான் கொண்டுவிடும் என்று முன்பு சந்தே கித்தபடியே, இப்போது நடப்பதைக்கண்டு காமாக்ஷி மனம் வருந்தினுள்.

கிருஷ்ணமூர்த்தியிடம் கூறி, மணியைத் தடுத்து புத்தி கூறும்படி வற்புறுத்தினுள். அவரோ, இந்த அழகான பிள்ளை யிடம்போய் நான்ஒன்றும் கெஞ்சமாட்டேன். நீசொல்லி அவமா னப்பட்டது போதாதென்று என்னைவேறுபடச் சொல்கிருயா? விமலா குணம் ஊரெல்லாம் தெரிந்திருக்கிறது. போராததற்கு இவனும் தனக்குத்தான் அதிசயமாகப் பெரியமனுஷன் வீட் டுப்பெண் கிடைத்துவிட்டாளென்று, அவள் மனங்கோணுமல் நடந்து இடமும் கொடுத்துவிட்டான். அதன் பலனை நன்ருக

அனுபவித்து அறிந்து திண்டாடினால்தான் புத்திவரும். நன்றாகபோகட்டும்! இவன் என்னைக் காப்பாற்றவேண்டாம். என் பென்ஷனைக்கொண்டு ஜீவிக்கமுடியும் என்று சொல்லிவிட்டார்.

பாவம்! காமாக்ஷியின்மனம் எளிதில் சமாதானமடையவே இல்லை. குழந்தை கண்ணனையும் மணியையும் பிரிய மனமில்லாமல் கண்களில் கண்ணீரும் நெஞ்சில் வேதனையுமாக பிரிந்தாள்.

விமலாவின் தனிக் குடித்தனம் மிகவும் ஆனந்தமாகவும் ஆடம்பரமாகவும் நடந்தது. காலையில் மணி சாப்பிட்டு வேலைக்குப்போய்விட்டால் விமலாவிற்கு வார மாத பத்திரிகைகளும் ரேடியோவும் குழந்தையுமே பொழுது போக்கு. மாலையில் மணி வருவதற்குள் காபி டிபன் தயாரித்து இரவு சமையலையும் செய்துவிடுவாள். மணி வந்ததும் டிபன் சாப்பிட்டுவிட்டு உடைமாற்றிக்கொண்டு சினிமாவோ டிராமாவோ உலாவவோ போவார்கள். தினசரி இவ்விதமே நாட்கள் போவதே தெரியாமல் குஷியாக இருந்தனர். மணி மாத்திரம் எப்பொழுதாவது ஒருமுறை பெற்றோரைப் பார்த்து வருவான். விமலாவை அழைத்தால் அவள் ஏதாவது ஆக்ஷேபம் கூறிவிடுவாள்.

விதம் விதமான ஜாக்கெட் துணிகளும் புடவைகளும் மற்ற அலங்காரசாமான்களும் குழந்தையின் விளையாட்டுப் பொருள்களும் விமலா நினைத்தது நினைத்தபடி வாங்குவதற்கும். குடும்பச்சிலவிற்கும் மணியின் சம்பளம் 210 ரூ-வும் போதாமல் மாதக்கடைசியில் பணமுடையும் ஏற்படும். விமலா விரும்பியதை பணத்தட்டால் மணி வாங்காவிடிலோ அவளுடைய சிலவை ஆக்ஷேபிக்கவோ கண்டிக்கவோ செய்தால் அதனால் அவர்களுக்குள் சண்டையும் மனஸ்தாபங்களும் முளைக்கும். விமலாவின் தந்தை இறந்துவிட்டதாலும் அண்ணன்களும் சம்சாரியாகிவிட்டதாலும் பிறந்தகத்து சலுகையும் குறைந்தது. விமலா ஒருநாள் வழக்கம்போல வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு தன்னையும் குழந்தையையும் அலங்கரித்துக்கொண்டு வெளியில் கிளம்ப மணியின் வரவிற்கு காத்திருந்தாள். வெகு நேரத்திற்கு பிறகு உடல் சோர்ந்து முகம்வாடி வீடுதிரும்பிய மணியைக்கண்டு கவலையுடன் ஏன்? இத்தனைநேரம் உடம்பு சரிஇல்லையா வேலை அதிகமா? என்னவோபோல் இருக்கிறீர்களே என்று கேட்டவாறு அவன் நெற்றியில் கைவைத்துப் பார்த்தாள்.

மணி, இன்று பாங்கியில் ஏகக்கூட்டம்: பணம்கொடுக்கல் வாங்கல் செய்கையில் எப்படியோ ரூ 200 கணக்கில் கை தவறிவிட்டது. இன்னும் ஒருவாரத்திற்குள் இரண்டாம் பேர் அறியாமல் அதைக் கட்டவேண்டும்: இல்லாவிட்டால் என் மானமே போய்விடும். ஏற்கெனவே உன் தடபுடல் சிலவைத் தாங்கமுடியாமல் திணறுகிறேன். ஜவுளிக் கடைபாக்கி 180 ரூ-க்குமேல் நிற்கிறது. டாக்டர் பில்வேறு 30-ரூ தரவேண்டும்

கையில் காலணு இல்லை. இந்த லக்ஷணத்தில் புதுசாக ஒரு தண்டச்சிலவு முளைத்துவிட்டது. எப்படித்தான் சமாளிக்கப் போகிறேனே தெரியவில்லை...என்று எரிந்து விழுந்தான்.

ரோஷமும் வருத்தமும் அடைந்த விமலா, என்மேல் சீறி விழுந்து என்ன செய்வது? நான் அண்ணவை வேண்டுமானல் கேட்டுப் பார்க்கிறேன் என்ருள்.

வெறுப்படைந்த மணி பதிலே பேசவில்லை.

மறுநாள் விமலா பிறந்தகம் சென்று அண்ணனிடம் விஷயத்தைக் கூறினள். எல்லாவற்றையும் கேட்ட அண்ணன்,

உனக்கு குழந்தை முதலே, கடைக்குட்டி, என்று அதிக செல்லம் கொடுத்துவிட்டதால் உன் கூடவே முரட்டுப்பிடிவாதமும் தான்தோன்றித்தனமும் வளர்ந்துவிட்டது. எவ்வளவோ அருமையும் பெருமையுமாக நடத்திய மாமனர் மாமியார்களை விட்டுப்பிரிந்து தனிக்குடித்தனம் வைத்ததே அனுவசியம். சிக்கனமும் வரவுக்குத் தகுந்த சிலவும், தெரியாவிட்டாலும் வீண் ஆடம்பரமும், வரவுக்கு மிஞ்சிய சிலவும் கற்றிருக்கிருய். மாப்பிள்ளையின் 210-ரூ சம்பளம், உங்கள் சின்னக் குடும்பத்திற்கே போதாமல் கடன் என்ருல், பெரிய குடும்பத்தை உடைய எனக்கு வரும் 300 ரூ. எந்த மூலை? மேலும் இந்த வருஷம் அப்பா இறந்ததால், மாஸியம் முதலிய மாதாந்திர அதிகப்படி சிலவு. காலணு பிரட்டமுடியாது என்று சொல்லிவிட்டான்.

விமலா உடனே திரும்பி விட்டாள். அண்ணனின் பேச்சு அவள் மனதில் சுருக்கென்று தைத்தது. அவள் மனம் அளவற்ற அவமானம் ஏமாற்றம், துக்கம் முதலியவைகளால் பெரும் அதிர்ச்சியை அடைந்தது. பணக்கவலையால் மணியும் இளைத்துத் துரும்பானுன்.

ஒருவித முடிவிற்கு வந்த விமலா, மூன்றரை சவரன் எடையுள்ள, தன்னுடைய மாங்காய் மாலையை மணியிடம் கொடுத்து, அதை விற்று பாங்கியில் கட்டும்படி கூறினள். மணிக்கு இஷ்டமில்லையானுலும் வேறு ஒன்றும் தோன்ருததால், விமலாவின் வற்புறுத்தலுக்கு இசைந்தான்.

விமலா குடும்பச் சிலவுகளை வர வர சுருக்கி வந்தாள். குழந்தை கண்ணனுக்கு ஆண்டு நிறைவும் வந்தது. எப்படி இருந்தாலும் ஆண்டு நிறைவையாவது தன் வீட்டில் வந்து செய்யும்படி காமாக்ஷி சொல்லி அனுப்பினள். மணிக்கு சம்மதந்தான், விமலா இஷ்டப்படவில்லை. தாங்களிருக்கும் இடத்திலேயே விமரிசையாக செய்யவேண்டும். அவர்கள் இங்கு தான் வரட்டுமே என்று கூறிவிட்டாள்.

வீட்டின் முதல் பேரக்குழந்தையின் பிறந்தநாளை தங்கள் சொந்த வீட்டிலேயே கொண்டாட முடியாததைப்பற்றி வருத்தமிருந்தாலும் காமாக்ஷி, கிருஷ்ணமூர்த்தி, அதைப்

பாராட்டாமல் ஆண்டு நிறைவன்று காலையில் வந்துவிட்டு சாயங்காலம் வீடு திரும்பினர்.

மணிக்கும் நாளடைவில் தனிக்குடித்தன வாழ்க்கை அலுத்துவிட்டது. குழந்தை முதல் அவன் அம்மாவின் செல்லப்பிள்ளையாக வளர்ந்தவன் ஸ்கூலில் படிக்கும் நாளையிலும் ஆபீஸ் போகும் நாளையிலும், மாலையில் வீடுதிரும்பியதும், தாயின் அருகிலமர்ந்து அன்றாடம் நடந்த வெளிவிஷயங்களை வர்ணிப்பான். காமாக்ஷியும் மற்றவர்களும் ஆவலுடன் கேட்பார்கள். அவன் எந்தத் தின்பண்டம் விரும்புகிறானோ அதை உடனே செய்து கொடுத்தால்தான் அவனுக்குத் தூக்கம் வரும். அவன் காலில் முள் குத்தினாலும் தன் கண்ணில் குத்தியதுபோல மனந்துடிப்பாள். ஒவ்வொரு சமயமும் அவள் தனக்காக பட்ட பாடுகளையும், காட்டிய அன்பையும் எண்ணும் போதுதான் ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு, என்று சொல்வதுபோல முன்கோபமும் ஆத்திரமும் கொண்டு குடும்பத்தைப்பிரிந்து வந்ததைக்குறித்து அவன் மனம் வருந்தியது.

குழந்தை கண்ணனுக்கு சாதாரண ஜுரத்தில் ஆரம்பித்தது, கடும் நியுமோனியா, ஜுரமாக மாறி இரண்டுநாளாக குழந்தை கண்ணை விழிக்காமலிருந்தது. அனுபவமற்ற விமலாவுக்கு தைரியம் கூற வீட்டில் பெரியவர்கள் யாருமில்லை. குழந்தையைப் பார்க்க பார்க்க அவளுக்கு கவலையும் வேதனையும் அதிகரித்தது. விமலாவின் தாய் வென்னீர் அறையில் வழுக்கி விழுந்து கால் நரம்புகள் பிசகி படுக்கையிலிருப்பதால் அவளும் உதவிக்கு வரமுடியவில்லை. டாக்டர் வந்து பார்த்து மருந்துகள் கொடுத்து வந்தார்.

விமலாவின் மனம், சில நாட்களாகவே கலங்கி இருந்தது. புக்ககம் வந்தது முதல் தான் மிகவும் குறுகிய புத்தியுடன் அலக்ஷியமாக நடந்து கொண்டும், காமாக்ஷி எவ்வளவு பெருந்தன்மையுடன் தன்னை அன்பாக நடத்தினாள்! குடும்பப் பொறுப்புணர்ந்து வீண் படாடோபமற்று இருக்கும்படி கூறியதையும் அனுபவமற்ற தனக்கு குடும்ப பழக்க வழக்கங்களை எடுத்துக் கூறியதையும் குற்றமாக எண்ணியது எவ்வளவு தவறு? பெற்றோரையும், பிள்ளையையும் பிரித்து ஒற்றுமையைக் குலைத்துவிட்டதால், தனக்கு கெட்ட பெயரும், வீண் கஷ்ட நஷ்டங்களும், தனக்கும் மணிக்கும் அடிக்கடி மனஸ்தாபங்களும் தான் கண்ட பலன். எவ்வளவு சுதந்திரத்துடன் தனியாக இருந்தாலும் ஓரளவு கட்டுப்பாடும், சிக்கனமும் வேண்டிய அவசியத்தை உணர்ந்தாள். இவ்வித சஞ்சலத்தில் மூழ்கி இருந்த விமலா, குழந்தையின் படுக்கையால் மிகவும் வேதனை அடைந்தாள்.

வேளைக்கொரு மருந்துகொடுத்தும் பலன் எதுவும் தெரியவில்லை. மார்பில் கபம் கட்டி இருப்பதால், மிகவும் ஜாக்கிரதையாக கவனித்துக்கொள்ளும்படி கூறி, டாக்டர் ஊசி

போட்டு விட்டு மருந்துகொடுத்துச் சென்றார். கலகல வென்று சிரித்து ஓடிவிளையாடும் குழந்தை கண்ணை விழிக்காமல் துவண்டு கிடந்ததைக்கண்டு மணிக்கு என்ன செய்வதென்றே விளங்கவில்லை.

விமலா,பகவானே! என்னுடைய தவறுதல்களுக்கு தண்டனையாக, நான் அடைந்த கஷ்ட கஷ்டங்களுடன் என்னை மன்னித்துவிடு. உயிர்ச்சேதமில்லாமல் குழந்தையை காப்பாற்று! என்னை சோதித்துவிடாதே! என்று கண்ணீர்வழிய பிரார்த்தித்தாள். மணியிடம் அம்மாவிற்கு யாரிடமாவது சொல்லி அனுப்புங்களேன் என்று தவித்தாள்.

மணி பக்கத்து வீட்டிலிருக்கும் பையனிடம் செய்தி சொல்லி அனுப்புகையில் வாசலில் ஒரு வண்டி வந்து நின்றது அதிலிருந்து காமாக்ஷியும் கிருஷ்ணமூர்த்தியும் வேகமாக இறங்கிவருவதைக்கண்டு மணி திகைப்படைந்தான. காமாக்ஷி குழந்தைக்கு எப்படி இருக்கு மணீ! என்று ஆவலுடன்கேட்டவாறே உள்ளே நுழைந்தாள். மணியும கிருஷ்ணமூர்த்தியும் பின் தொடர்ந்தனர்.

கட்டிலில் விடப்பட்டிருந்த குழந்தையின் அருகில் சென்று காமாக்ஷி குழந்தையின் கன்னத்தைத் தடவி,கண்ணு! என்றழைத்தாள். குழந்தையின் அருகில் சோகப்பதுமையாக அமர்ந்திருந்த விமலாவின் கண்களிலிருந்து மாலை மாலையாக கண்ணீர் பெருகியது.

காமாக்ஷி,அழாதே விமலா!ஏதோ அனுபவிக்கவேண்டிய வேளை. பாலுவுக்கு இரண்டுநாளாக உடம்பு சரியில்லை. அவனை அழைத்துக்கொண்டு இன்று காலைஅப்பா டாக்டர் வீட்டுக்குப் போனபோது டாக்டர் இங்கு குழந்தைக்கு உடம்பு சரியில்லாதிருப்பதைகூறினாராம். மனம்கேழ்க்காமல்வந்தோம என்றாள்.

குழந்தையின் நிலைமையைக்கண்டு எல்லோரும் கவலையையும் பயத்தையும் அடைந்தார்கள். டாக்டரின் மருந்தைத் தவிற காமாக்ஷி தனக்குத் தெரிந்த கஷாயம் வேப்பெண்ணெய் முதலிய கை வைத்தியங்களும்செய்தாள். அன்று பூராவும் கஞ்சிகூட இறங்காமலும் கண் விழிக்காமலுமே சென்றது. செய்து கொண்ட பிரார்த்தனைகள் கணக்கே இல்லை. மறுநாள் குழந்தையின் முகத்தில் சிறிது தெளிவுபிறந்து குணம் தெரிந்தது.

விமலா, "அம்மா! நான் இப்பொழுது பழைய விமலா இல்லை. என்மனதில் படிந்திருந்த அறியாமை வீண் ஆடம்பரம் முதலிய மாசுகள் நீங்கி புது விமலாவாகிவிட்டேன். என் மதியீனத்தால் உங்களை சரியாக புரிந்துகொள்ளாமல் தவறுதலாகநடந்ததைமறந்து மன்னித்துவிடுங்கள்" என்றாள். அவள் கண்களில் நீர் ததும்பியது. காமாக்ஷி மகிழ்ச்சியின் சிகரத்தையே அடைந்தாள்.

23

துப்பறியும் புலிகளானாலும் கூட முதலில் தோல்வியைக் கண்டதும் இது தங்களுக்கு அனுபவ ஸாத்யமானதேயாகும் இது புதிதல்ல என்கிற நிதானமும் அமைதியும் உண்டாவ தில்லை. இம்மாதிரி ஆகி விட்டதே இது சகுனமா! அபசகு னமா! ஜெயம் கிடைக்குமா! என்கிற ஏக்கம் உண்டாகிவிடு கிறது. அதிலும் நாயுடுவை விட அம்புஜத்திற்குத்தான் அதிக மானகவலையும் மனத்தில் ஒரு வித ஏக்கமும் உண்டாகி மனம் தளரவும் தலைப்பட்டுவிட்டது. ஏனெனில் இதுவரையில் இம் மாதிரி விசித்திரமான தீவட்டிக்கொள்ளைக்காரர்களை இவர்கள் கண்டதுமில்லை கேட்டதுமில்லை. ஆகையால் இத்தகைய மாய ஜாலக்கொள்ளைக்காரர்களைப் பிடித்துவிட்டால் இதைவிட பெருமையும் கீர்த்தியும் தங்களுக்கு வேறு எதுவும் கொடுக் காது. அத்தகைய விஷயத்தில் நம்முடன் கூடவந்து நம்முடன் பழகிப்பேசி நம்மையே ஏமாத்திவிட்டார்களே,! என்ன அவ மானம் என்று கண்ணீர்விட்டுக்கலங்கும் சமயம் நாயுடு அங்கு வந்தார்.

அம்புஜத்தின் நிலைமையைக் கண்டு நாயுடு சற்று நகைத்த வாறு, "குழந்தாய்! இதற்கேவா இப்படி சளைத்துவிட்டாய். உனக்கு நான் பதினாயிரந்தடவைகள் சொல்லி இருக்கிறேன். மறுபடியும் சொல்கிறேன். பகவான் தன்னையே அனவரதமும் நம்பியுள்ள பக்தர்களுக்கு எடுத்தஎடுப்பிலே ஜெயத்தையோ! காரியத்தில் சகலவிதமான அம்சத்திலும் த்ருப்தியையோ கொடுத்துவிடமாட்டார் அப்படிக்கொடுத்துவிட்டால் தன்னை மக்கள் அடியோடு மறந்துபோய் பாவிகளாகி விடுவார்கள்; நாஸதிகம் தலை எடுத்து உலகத்தில் நாசந்தான் தலை விரித்துத் தாண்டவம் புரியும். ஆகையால் தன்னை அடிக்கடி மறக்கா மல் நினைப்பதற்கான வழியில்தான் கருணைபுரிவார் என்ற தத் துவத்தை நீ மறக்கலாமா! அம்புஜம்! நீ ராமாயணம், பாகவ தம், பாரதம், முதலிய சகலத்தையும் படித்திருக்கிறாயே. அதில் குந்திதேவி என்ன சொன்னாள். அதை மறந்துவிட் டாயா! கண்ணன் குந்தி தேவியை நோக்கி, "அத்தை! உன் மக்கள் ராஜ்யாதிபதிகளாகிவிட்டார்கள். நான் வந்த காரியமும் முடிந்துவிட்டது. உனக்கு ஏதாவது ப்ரத்யேகமாய் வேண்டி யிருப்பதைக்கேளு. கொடுக்கிறேன்" என்று கேட்டார். அதற் குக் குந்திதேவி சொல்லிய அத்புதமான பக்திநிறைந்த ஆணித்திரமான பதிலல்லவா, உலக மக்களுக்கு ஒரு பெரும் பாடமாகும்! அந்த தேவி என்ன கேட்டாள் தெரியுமா! கண்ணா! உன் மாயாலீலைகளின் அத்புத மகிமைகளை எல்லாம் பார்த் தாகிவிட்டது. ராஜ்யபதவியும் அமோக சுகமும் வந்துவிட்டத

183171

னால் நான் பெருமைப்படவில்லை. நான் கோரும் கோரிக்கை என்ன தெரியுமா! நாங்கள் சதா உன்னை மறக்காமல் இருப்பதற்காக அடிக்கடி ஆபத்துக்களை கொடுத்துக்கொண்டே இரு. ஆபத்துக்காலத்தில்தான் உன்னை நினைப்பார்களேயன்றி, நினைத்தபடி முடிந்தால் நினைப்பரோ கடவுளை! என்கிறபடி உன்னை அனவரதமும் நினைத்து பக்தி செய்யும்படி அனுக்ரகம் பண்ணு, க்ருஷ்ணா! அதைத்தான் நான் வேண்டுகிறேன்... என்றாளாம்.

இம்மாதிரி யாராவது வேண்டுவார்களா! சாதாரணமான சிலாரூபத்தில் வாய்திறவாது வீற்றிருக்கும் அர்ச்சா மூர்த்தியைப் பார்த்தே நாம் அதுவேணும் இதுவேணும் என்று இகத்திற்கு சாதகமான காரியங்களையே வேண்டுகிறோம். நேருக்கு நேராகவே பரந்தாமனே வந்துகேட்பதாகஇருந்தால் நாம் அவரைச் சும்மா விடுவோமா! அடாடா! நினைக்கவும் விசித்திரமாயிருக்கிறது. குந்திதேவிக்கு அப்போதிருந்த சந்தோஷத்தில் என்னென்ன வேணுமோ கேட்டிருக்கலாமல்லவா! அம்மாதிரி கேட்காமல் எப்படிப்பட்ட த்யாக புத்தியுடன் கேட்டாள் பாரு. இவளுக்கிருக்கிற அத்புதமான ஞானம் சாந்தீபினி என்கிற மகாஞானியும் ஸ்ரீக்ருஷ்ணபரமாத்மாவின் குருவுமான உத்தமருக்குக் கூட இல்லை. அவர் ஸ்ரீக்ருஷ்ணனிடம் குருதக்ஷிணை கேட்ட அழகைப்பாரு. என்றோ இறந்துபோன தன் மகனை உயிருடன் கொண்டு தரும்படிக்கேட்டு அப்படியே பெற்றாரேயன்றி சாக்ஷாத் லோகரக்ஷகனிடம் மோக்ஷஸாம்ராஜ்யத்தைக் கேட்டுப் பெற்று மகிழத்தெரிந்ததா! அது மட்டுமா! இன்னொரு ப்ராமணோத்தமர் தனது இறந்துபோன பல குழந்தைகளையும் உயிருடன்கொண்டு தரும்படிக்ருஷ்ணனை வேண்டிப்பெற்றாராம். தேவதைகளோ! அம்ருதத்தை உண்டு ஆநந்தமடையக் கோரி பகவானிடம் வேண்ட பகவான் க்ஷீராப்தியைக் கடைந்து அமுதம் திரட்டித்தான் ஜகன்மோகினி அவதாரம் செய்து தேவர்களுக்கு அமுதத்தைப் பகிர்ந்து கொடுத்தார். அத்தகைய தேவர்களுக்குத்தானாகட்டும், மோட்சஸாம்ராஜ்யத்தைக் கோரத்தோன்றியதா! இதுபோல் இன்னும் எத்தனையோ உபமானம் கிடைக்கிறது. என்றாலும் குந்தியின் வாக்குதான் நாம் முக்யமாக எடுத்துக்கொள்ள வேணும். பகவானை நாம் இடைவிடாது பஜித்து பெரும் வெற்றியை அடைவதற்காகத்தான் நமக்குத் தோல்வியை முதலில் காட்டி வெற்றியைப் பிறகு கொடுக்கிறார். இதை நீ மறந்துபோய் ஏன் இம்மாதிரி வருத்தப்படவேண்டும். நீயே யோசித்து முடிவுசெய்தபடி காட்டுவேடர்களின் உதவியை நாம் இப்போதே நாடி அதன் மூலம் ஏதாவது துப்பறியலாம் என்று தோன்றுகிறது. ஆகையால் உடனே அதற்குத் தயா

ராகப்புறப்படு. வீண் சோர்வு வேண்டாம்" என்று தேருதல் கூறினர்.

ஜாம்பவானுல் தட்டிக்கொடுக்கப்பட்ட ஹனுமானுக்கு உண்டாகிய வீரமும் பலமும் போல் அம்புஜத்திற்கும் உண்டாகிவிட்டது. உடனே மூட்டை முடிச்சுகளுடன் தயாரானள். அச்சமயம் சேவகன் வந்து அம்மா! கொடைவள்ளல் அருளப்பனும் அவர்மனைவியும் காரில் வந்திருக்கிறார்கள் உள்ளேவரலாமா என்று கேட்கிறார்கள் என்றான். அருளப்பனை அறியாதார் உண்டா! அவர் வந்திருக்கிறார் என்றதும் பரமசந்தோஷத்தையடைந்து நாயுடுவும் அம்புஜமும் சேர்ந்து வரவேற்று அழைத்து வந்தார்கள். தாம்பூலதட்டுகள் சகிதம் இருவரும் வந்து நாயுடுவின் முன்பு வைத்து நமஸ்கரித்த பிறகு, நீங்கள் வீட்டிலிருக்கிறீர்களோ...அல்லது தீவட்டிக்கொள்ளைக்காரகளின் வேட்டைக்குப்போய் விட்டீர்களோ என்று யோசனை செய்தபடியே வந்தோம். எங்கள் நல்லகாலம் நீங்கள் இருக்கிறீர்கள். பரமசந்தோஷம். என்று அருளப்பனே கூறினர்.

அம்:—இன்னும் பத்து நிமிஷம் கழித்து வந்திருந்தால் நாங்கள் கிளம்பிப்போயிருப்போம். உலகத்திலேயே கண்டிராதவிசித்ரக்கொள்ளைக்காரர்களாகவன்றோ இருக்கிறார்கள். எங்கள் ஜென்மத்தில் நாங்கள் இம்மாதிரி கண்டதுமில்லை கேட்டதுமில்லை. கூடவே இருந்து மூக்கையறுப்பதுபோல் செய்துவிடுகிறார்கள்! இதுதான் விசித்திரத்திலும் விசித்திரமாயிருக்கிறது. ஏன் ஸார் நீங்கள் இத்தனை செல்வச் சீமானாக இருக்கிறீர்களே! உங்களை அந்தக்கொள்ளைக்காரர்கள் ஒருபோதும் கொள்ளையடித்ததில்லையா! என்று அம்புஜம் ஒரு போடுபோட்டாள்.

அருளப்பன் கடகடவென்று சிரித்தார். பிறகு அம்மணி நான் செல்வச் சீமான் என்று என்னைப்பற்றி நான் கனவிலாவது நினைத்திருந்தால் என்னை ஒரு கால் அவன் மோப்பம் பார்த்திருக்கலாம். நான் வெறும் பக்கிரி. ஏழையிலும் பரம ஏழை ஏன் இத்தனை வைரநகைகள் போட்டிருக்கிறீர்கள். என்று கேட்கலாம். எந்த சமயம் யார் என்னிடம் யாசகம் கேட்கிறார்களோ! அவர்களுக்கு உடனே கழட்டிக்கொடுத்து உதவி புரிவதற்காக இந்த சரீரத்தில் இருப்பிடமாக வைத்திருக்கிறேன். எனது பெருமையை நானே சொல்வதாக நினைக்கக்கூடாது. எனக்கு எந்த விஷயத்திலும் பெருமையே கிடையாது. சகலமும் ஆண்டவனின் திருவடிகளுக்கே அர்ப்பணம் செய்துவிட்டு பட்டும் படாத தாமரை இலை நீர்த்துளி போன்று வாழ்க்கை நடத்துவதை ஆண்டவன் தானறிவான். என்னிடம் கொள்ளையிடவந்தால் சகலமும் அடித்துக்கொண்டு போகட்டும். பரம த்ருப்திதான்! என்று மிக்க சாந்தமாய்ப்

பேசுவதைக் கேட்டு மிக்க வியப்படைந்த நாயுடுகாருவும் அம்புஜமும் ஒரே ஆச்சரியத்துடன் அவர்களையே பார்த்தார்கள்.

ஸார்! இக்கலிகாலத்தில்கூட இத்தகைய புண்ணிய சீலரை லக்ஷயப் புருஷரை தர்ம தாதாவைக் காண்கிறோமே. இதுவே சிறந்த ஆச்சரியமாயிருக்கிறது. பெற்ற தாயிக்கு அன்னமிட்டு ஆதரிக்க மனமற்றபிள்ளைகளும், கட்டிய மனைவியைக் கண்கலங்கவிட்டு ஊர் சுற்றும் வீண தடியர்களும், கட்டிய கணவனை மதியாது பேய்த் தாண்டவம்செய்யும் பெண் பேய்களும், ஆசாரம், அனுஷ்டானம், பக்தி, ச்ரத்தை, மரியாதை மாண்பு முதலிய எல்லாம் குறைந்துவிட்ட மனிதர்களின் தரிசனமும் நிறைந்திருக்கும் இக்காலத்தில் தங்களைக் காணும் போது கடவுளையே பார்ப்பதுபோலல்லவா உணர்ச்சி உண்டாகிறது. ஏராளமான கோயில் கட்டியிருக்கிறீர்களாமே...

என்று முடிப்பதற்குள் அருளப்பன், நண்பரே! நீர் கட்டினீராமே என்று என்னைக் குறிப்பிட்டுச் சொல்லாதீர்கள். அந்தந்த காரியத்தை அவன் தக்கப்படி நடத்திக்கொள்கிறான். எங்கெந்த ஊர்களில் கோயில்கள் இல்லையோ அங்குள்ள ஜனங்கள் பகவத் தரிசனத்திற்காகத் தவிக்கிறார்களோ, அதேபோல் பள்ளிக்கூடம், ஆஸ்பத்ரி, ப்ரயாணிகளின் ஸவுகர்யத்திற்காக சத்திரங்கள், சுமைதாங்கிகள், தொழிற்சாலை முதலிய உபயோகமான ஸாதனங்கள் எக்கெந்த இடங்களில் தேவையோ! அந்தந்த இடங்களுக்குச் சென்று விசாரித்துப் பார்த்து சாதனங்களை நிறைவேற்றுமாறு இந்த அடிமைக்கு ஆண்டவனின் கட்டளை. அதையே இந்த அடிமை சிரசாவகித்து நாடகக் கம்பெனியின் மூலம் வரும் சகல வருவாய்களையும் கொண்டு ஆண்டவனின் கட்டளைப்படிக்குச் செய்து வருகிறேன். இந்த அடிமைக்கு 108 என்றால் ஒரு பெரிய ஆசை. நம்பிக்கை. காயத்ரியின் கணக்கும் நூற்றெட்டுத் திருப்பதிகளின் எண்ணிக்கையும் சேர்ந்த பெரும் மதிப்பும் சிறப்பும் கொண்டதாகும். அதனாலேயே பகவானின் கட்டளைபடிக்கு 108 கோயில்கள், பள்ளிக்கூடங்கள், சத்திரம் சாவடி, ஆஸ்பத்ரிகள், நூற்றெட்டு ஏழை ப்ரம்மசாரிகள், கன்யா பெண்களுக்குக் கல்யாணம், பூணூல், அக்ஷராப்யாஸம், 108 சஷ்டிபூர்த்தி கல்யாணங்கள், 108 பஜனைமடம், 108 வீடுகள் ஆக இப்படியே பலவிதத்திலும் மக்களுக்கு உபயோகமான காரியங்களை கணக்குப்படிசெய்து முடித்துவிட்டால் என் சங்கல்பத்தின் கடமையின் எல்லைக்கு வந்துவிட்டதாக ஒரு முடிவும் தீர்மானமும் ப்ரதிக்ஞையும் செய்துகொண்டிருக்கிறேன். அதன்படிக்கு அனேகமாய் எல்லாம் நிறைவேறிவிட்டது. இந்த அடிமையின் ஒரு ஆசைப்படி அம்பாள் புரத்தில் க்ராமப் புனருத்தாரணமும் நடைபெற்று அதோடு 108 கோயில்களும் பூர்த்தியாகிவிடுகிறது. இன்று நாங்கள்

எதற்குவந்தோம் என்றால் எனது ஆண்டவனின் ஆணைப் படிக்கு இன்று 108 வது பள்ளிக்கூடம் கட்டிடவேலை முடிந்து காலை 10-ந்தேதியன்று திறப்புவிழாவை நடத்தத் தீர்மானித்திருக்கிறேன். உலகத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள் பாருங்கள்: ஏராளமான பாடசாலைகள் திறந்துவிட்டால் சிறைச்சாலைகளைத் தானே மூடிவிடலாம் என்று. அதுபோல் 108 பாடசாலைகள் திறந்து கல்விச்செல்வத்தை வாரி வழங்க பெரும் ஆசை உண்டாகியது. 108 வது பாடசாலையை தயவு செய்து தாங்கள் திறந்துவைத்து விழாவை நடத்திக்கொடுக்கவும். 108 வது பஜனை கோயிலை உங்கள் குமாரத்தி திறந்து வைத்து எங்களை கவுரவிக்கவும் நான் ஆசைப்பட்டு அதைக் கேட்கவே வந்தேன். என் மனோரதமும் கடமையின் எல்லையும் இதோடு முடிவடைகிறது. க்ருபைகூர்ந்து ஒப்புக்கொள்ள வேண்டும். 108 வது கோயிலாகிய அம்பாள்புரத்தை அந்த சின்னஞ் சிறுமி சித்ரா காட்டியதனால் அவளிடம் எனக்கு அத்தனை ஆசையும் வாத்ஸல்யமும் உண்டாகி இந்த கல்யாணத்தையே முடித்துவைத்தது இந்த அடிமை, அந்த கோயில் திருப்பணி முடிந்ததும் அந்த விஷயத்திலும் என் கடமை முடிந்துவிடுகிறது. அந்த கோயிலின் மரியாதை, புதிய உரிமைகள் முதலிய சகலத்தையும் சித்ராவிடமே பாத்யதையைக் கொடுக்க சிலாசாசனமே செய்யத் தீர்மானித்துவிட்டேன். தாங்கள் இதை அவர்களிடம் சொல்லவேண்டாம். உங்களுக்குத் தெரிவதற்காகச் சொன்னேன்...சரி நேரமாகி விட்டது. உங்கள் உத்திரவு வேணும் என்றார்.

இந்த ஆச்சரியமான விஷயங்களைக் கேட்டு இருவரும் பூரித்துப்போய் ஒப்புக்கொண்டார்கள். அருளப்பனும் மிக்க சந்தோஷத்துடன் விடைபெற்றுக்கொண்டார். இக்கலியில் இருந்தாலும் இத்தகைய கர்ணனல்லவா இருக்கவேண்டும். சகல உபயோகமான காரியங்களையும் 108 எண்ணுடன் செய்வதானது பெரும் மகிழ்ச்சிக்குரியதும் உலகம் உள்ளளவும் நிரந்தரமாய் நிற்கக்கூடிய அழியாத புகழ்பெற்றதாயுமல்லவா விளங்கும்! மகா கர்மயோகி என்றால் மிகையாகாது. என்று தமக்குள் பேசிப் பூரித்தார்கள். அவ்வானந்தமே இதயத்தில் தேங்கியது.

24

மனது இடிந்து மிகமிக சோகத்தில் மூழ்கித்துடிக்கும் சித்ராவுக்கு தன் மாமனார் தன்னிடம் இத்தனை ஆசையுடன் உயிராயிருக்கும்போது இந்த பக்தி விஷயத்தில் ஏன் இத்தகைய குறுகிய நோக்கமும் அனுவச்ய வார்த்தைகளும் வர வேணும். ஏற்கெனவே செல்வவந்தராக உள்ள இவருடைய

உள்ளம் பரிசுத்தமான பக்தியுடன் இருந்தால் எத்தனை சிறப்பாக இருக்கலாம்? ஏன் இப்படி நாஸ்திகபுத்தி உண்டாக வேணும்—என்கிற எண்ணம் உண்டாகிக் கண்ணீர்கூட உதிர்த்துவிட்டது. தான் இத்தனை ஏற்பாடாகச் செய்திருப்பதைக்கண்டு பூரித்துக் கொண்டாடுவார்கள் என்று எண்ணியதற்கு நேர்மாறாக இம்மாதிரி செய்துவிட்டதற்கு இனி என்ன செய்வது என்று வருத்தத்துடன் இருப்பதைக்கண்ட ஜகதாம்பாள், "சித்ரா! இதற்காக வருந்தாதேம்மா! தானே சரியாகி விடுவார்! எனக்கு உண்மையில் பக்தியோ! பூஜையோ எதுவுமே தெரியாது. அவருக்குமேல் நான் நாகரீகம், எனக்கு மேல் அவர் நாகரீகம்; இவைகளில் போட்டாபோட்டியில் எங்கள் காலம் நடந்து வருகிறது. உன்னுடைய பழக்கவழக்கங்களை நீ விடாதேம்மா! நான் ஏன் இப்படி சொல்லுகிறேன் என்றால், என்மனத்தில் எதுவும் நிற்காது. அதை சொல்லி விடுகிறேன். என்னுடைய மனிதர்கள் என்னை ஏழைகளின் சம்மந்தம் செய்ததற்காக ஏசாமலிருக்கவேணுமே என்ற எண்ணத்துடன் படுத்தேன். அதே நினைவுடன் தூங்கிவிட்டேன். ஒரு பெரிய வயதான சுமங்கலிப்பாட்டி வந்து என்னைத் தடவிக்கொடுத்து... ஜகதா! உன்னைப்போல் பாக்யசாலிகள் வேறுயாருமில்லை! நீ வீணான கவலைப்படாதே! உன்னுடைய நாட்டுப்பெண் ஸாதாரணப் பெண்ணல்ல. அம்பாள் புரத்திலுள்ள அம்பாளின் வரப்ரஸாதம் பெற்ற புனிதவதி. அவளுடைய மகிமையை நீங்கள் இப்போது தெரிந்துகொள்ளாவிடினும் வெகுசீக்கிறம் தெரிந்துகொள்ளப்போகிறீர்கள். அவளை ஒரு சின்னவார்த்தைகூட சொல்லாமல் சந்தோஷமாய் வைத்துப் பூஜியுங்கள். என்று சொல்லிவிட்டு மறைந்துபோனாள். உடனே கண்விழித்துப் பார்த்தேன். எனக்கே மனத்தில் ஆனந்தம் பொங்கி வழிந்தது. நானே பூரித்துப்போய் உங்கள் படுக்கையறைப் பக்கம்வந்து பார்த்தேன். நீ ஆனந்தமாய்ப் பாடிக்கொண்டிருந்தாய். உன்கணவன் கேட்டு இன்புற்றிருந்தான். இதைக்கண்டு பூரித்தவாறு போய்விட்டேன். ஆகையால் சொப்பனத்தை எல்லாம் நான் நம்பாதவள் என்றாலும் இதைமட்டும் நம்பும்படி ஏதோ அந்தரங்க இதயத்தில் ஒன்று சொல்கிறது. ஆகையால் நம்பிக்கையுடன் இருக்கிறேன். அப்பாவின் மனங்கூட மாறும்படி நீ அவர் இஷ்டப்படி நாகரீகமாய் உடையணிந்து அவருடன் சென்று சொன்னபடி கேட்டுவிடு; உனக்குச் சகலவித சுதந்திரமும் கொடுத்து விடுவார். என்று தானே தேருதல் கூறினாள்.

என்றாலும் சித்ராவுக்கு மட்டும் மனது நிம்மதியாகவில்லை. மாமனார் சொல்லியபடி தான் வைத்த ஸ்வாமி படங்களைக் கழட்டவோ மாற்றவோ மனமின்றிக் குழம்பியவாறு அன்றைய பொழுது கடந்தது. கலியாணம் விசாரிப்பதற்காக

வருகிறவர்களும் போகிறவர்களும் ஏராளமாயிருந்ததால் முருகேசம் அதற்குமேல் எதுவும் சொல்லவோ செய்யவோ முடியவில்லை ஆதலால் காலையும்மாலையும் சித்ரா தன்னிஷ்டப் படிக்கு பூஜைசெய்து பெருமகிழ்வுடைந்தாள்.

பாஸ்கரன்:—சித்ரா! காலையில் அப்பாசொல்லியதற்காக நீ மிகவும் கண்ணீர்விட்டுக்கலங்கினாயாமே! அம்மா அதைச் சொல்லி சொல்லி வருத்தப்படுகிறாள். அப்பாவுக்கு சற்றுகூட யோசனையே இல்லை. புத்தியே இல்லை.....

ஆ...ஆ...என்ன வார்த்தை இது. நீங்கள் சரியான நினைவுடன்தானா பேசுகிறீர்கள்! பெரியவர்களை அதிலும் முன்னறி தெய்வத்தை இப்படித்தானா அவமதிப்பாய் துடுக்காய்ப் பேசுவது?....இது நன்றாக இல்லை. இன்று காலை முளைத்த எனக்காகவா உங்களைப் பெற்ற பிதாவைத் தூக்கிக் கவிழ்த்துப்பேசுவது? அவருக்குப் பிடிக்காத காரியத்தை நான் செய்தது குற்றமல்லவா! அதற்காக அவர் என்னைக் கண்டிப்பது நியாயந்தானே! அவர் சொல்படி நடக்க நாம் கடமைப்பட்டவர்களல்லவா! என்று சித்ரா ஹிதமாகப் பேசுவதைக் கண்ட பாஸ்கரனுக்குப் பிடிக்கவில்லை. சித்ரா! நீ சொல்வதை நான் ஒப்புக்கொள்ள முடியாது. க்ருகலக்ஷ்மிபோல் வந்துள்ள உனக்கு முதல் நாளே மனம் நோகும்படியாய் அனுசரீகமாய்ப் பேசலாமா! அவருக்குப் பிடிக்கவில்லை என்றால் அவர் இனிதனியாக இருக்கவேண்டியதுதான்......என்று முடிப்பதற்குள் சித்ரா கோபமடைந்து...பேஷ்! பெருமாள் பெரிய பெருமாளாகிற கதையைப்போலல்லவா இருக்கிறது உங்கள் வார்த்தை! தந்தையும் மகனும் பிரிந்து வாழும்வாழ்க்கையை நான் எங்காவது பார்த்தால் மிகவும் வெறுக்கிறவள். ஆதிமுதல் பெற்று வளர்த்து ஆயிரம்பாடும் பட்டு உருவாக்கிய பெற்றோர்கள் தனி சம்ஸாரம் செய்வதும் மகனும் மருமகளும் தனிசம்ஸாரம் செய்வதும் எவ்வளவுவெட்கக்கேடானதுதெரியுமா! இதை நான் சற்றுகூட விரும்பவே மாட்டேன். தம் மக்களின் இன்ப வாழ்க்கையைக் கண்டு பூரித்துப் புலகிதமடைய இரவு பகல் அந்த முன்னறி தெய்வங்களின் இதயம் எத்தனை தாகத்துடன் தவித்திருக்கும். / எத்தனை மனக்கோட்டைகள் கட்டி எதிர்பார்க்கும். தன் குடும்பத்தின் ஐக்யத்தில் தாங்களும் பகிர்ந்துகொண்டு திளைத்து நித்யானந்தத்தை அநுபவிக்கக்காத்திருக்கையில் அவர்களைப்பிரிந்து தனிவாழ்வுவாழ்வதா! சேச்சே இனி இம்மாதிரிபேசாதீர்கள் பெரியவர்களுடைய அன்புப்பிணைப்பில் ஆசிக்குடையினகீழ் நாம் வாழ்வதுதான் பகவானுக்கு ப்ரியமேயன்றி இக்காலத்திய சில துடுக்குப் பேர்வழிகளைப்போல நாம் வாழ்க்கை நடத்தவேண்டாம். அப்பா மறுமுறையும் அம்மாதிரி சொன்னால் நான் அவர் இஷ்டப்படியே அவைகளை எல்லாம் ஒழித்துவிட்டு இங்குள்ள சிறு பீரோவுக்குள் படங்

களைவைத்துப்பூஜைசெய்கிறேன். அல்லது என்னிதயக் கோயிலில் உங்களையும் கடவுளையும் சேர்த்து இருத்தி பூஜைசெய்து மகிழ்கிறேன். அதைவிட்டுப் பெரியவர்களை த்வேஷித்துக் கொண்டு எதிரிட்டுப் பேச நான் விரும்பவேமாட்டேன். நீங்களும் தயவுசெய்து அந்தபாதையில் காலைவைத்து விடாதீர்! எனக்கு இவைகள் கட்டோடு பிடிக்காது. மாமியார் சகலத்தையும் முன்னின்று செய்து இன்புறுவதைவிட்டு சில வீடுகளில் மாமியாரை மருமகள் அயலாரை அழைப்பதுபோல் மாமீ! என் குழந்தைக்குக் கல்யாணம் நீங்கள் வாருங்கள் என்று கூப்பிடுவதை நான் பார்த்து அந்த மருமகளிடம் சண்டையே போட்டுவிட்டேன்...

பாஸ்:—'பேஷ் ஏதேது நீ எனக்கு வாத்யார்போல்பாடம் சொல்லிக் கொடுப்பாய்போலிருக்கிறதே. சண்டையிட்டதற்கு அவள் சும்மாவிட்டாளா?...

சித்:—என் விடாமல்? பாவம் மருமகள் கூப்பிடும்போது மாமியாரின் மனது எப்படித்தான் துடித்தது தெரியுமா? கண்ணீர்கூட கடகடவென்று வந்துவிட்டது. தான் எடுத்து சீராட்டிப் பாராட்டி செய்து இன்புறவேண்டிய கடமைக்குப் புறம்பாக ஊராரைப்போல் மருமகள் அழைக்கவும் மாமியார் கல்லுபோல் பார்த்துக்கொண்டு நிற்கவும் மனம் வருமா! அம்மாதிரி பிரிவினை என்பதே குடும்பத்தின் கண்ணியத்தையும் கட்டுப்கோப்பையும் குலைத்துச் சிதறவடித்துவிடுமல்லவா? தயவுசெய்து நீங்கள் அப்பாவுடன் இதுவிஷயமாய் எதுவுமே சொல்லக்கூடாது. நீங்கள் என்மீது உண்மையான ப்ரேமையைக் காட்டுவதாயின் அதன் அடையாளம் பெரியார்களிடம் மனக்கசப்பின்றி தேனும் பாலும்போல் நடக்கவேணும். இது தான் என் கோரிக்கை. என்றாள்.

முதல் நாள்போல் அதிகாலையில் சித்ரா எழுந்து மாமனார் வருவதற்குள்— தனது பூஜைகளைமுடித்துக்கொண்டு வீட்டு வேலை சிலவற்றை கவனித்துவந்தாள். வழக்கம்போல் மணி 7 அடித்தபிறகு ஜகதாம்பாள் எழுந்துவந்தாள். சற்று நேரத்திற்கெல்லாம முருகேசம் அலயக்குலைய ஓரே பதைப்பும்வியப்பும் கலந்த த்வனியில் ஜகதா... ஜகதா...குப்பா...பாஸ்கரா.. சித்ரா எல்லோரும் இங்கு வாருங்கள்...இதோ பார்த்தீர்களா என்ன ஆச்சரியமான காட்சி என்று கூக்குரலிடுவதுபோல் கத்தியவாறு அழைத்தார்.

இன்னதென்று புரியாத பரபரப்புடன் ஜகதா ஓடினாள். கூடவே குப்பன் ஓடிவந்தான். என்னவோ ஏதோ என்ற துடிப்புடன் வந்த ஜகதாவின் கைகளைப்பிடித்துக்கொண்டு முருகேசம் இன்னதென்று விவரிக்க இயலாத சந்தோஷத்துடன் தைதை என்று குதிக்கிறார். ஜகதாவுக்கும் குப்பனுக்கும் சந்தேகமும் பயமும் உண்டாகிவிட்டது. எஜமானருக்குப்

பயித்தியம் பிடித்துவிட்டதா! அதனால் திடீரென்று இப்படி குதிக்கிறாரா என்று நடுங்கியவாறு அவரையே உற்றுப்பார்க்கிறார்கள்...என்ன சமாச்சாரம்! ஏனிப்படி குதிக்கிறீர்கள். என்ன விஷயம்!...மூளைகலக்கம் உண்டாகிவிட்டதா! இதோ பாருங்கள்!...என்று ஜகதாம்பாள் பதருகிறாள்.

மாமா! ஏதாவது துர்சொப்பனங்கண்டு பயந்துவிட்டீர்களா! அல்லது விஷஜந்துக்களைக்கண்டு மிரண்டுவிட்டீர்களா! என்ன சொல்லுங்கள் மாமா! என்று சித்ரா தவித்தவாறு கேட்கிறாள். பாஸ்கரன் அவர் கைகளைப்பிடித்து ஆட்டியவாறு என்னப்பா விஷயம். இன்னதென்று சொல்லாமல் குதித்தால் பயமாயிருக்கிறதே...என்று அதட்டியதுபோல் கேட்டான்.

முருகேசத்தின் அளப்பரிய சந்தோஷத்தில் எங்கே தனது மூளைகலங்கிவிடுமோ! இதயமே நின்றுவிடுமோ என்கிற உணர்ச்சி அவருக்கு உள்ளுக்குள்தோன்றி வதைக்கின்றது. எனினும் அபரிமிதமான சந்தோஷத்தைக் கட்டுப்படுத்த முடியாதுபோய்விட்டது. தன்னைத் தானே சற்று சமாளித்துக்கொண்டு சிறுகுழந்தையைப்போல்...சித்ரா! நீ மகாலக்ஷ்மி! உன்னைப்பற்றி நான் கேவலம் ஏழைப்பெண்ணு என்று முதலில் எண்ணி சிறிது இறுமாப்பு கொண்டது என் முட்டாள்தனம் என்பதையும் நீ பக்தியுடன் நேற்று பூஜை செய்த ஒரு நாளைய மகிமையே அபாரமான பலனைக்கொடுத்துவிட்டதால் பக்தியின்றி மனிதனை வாழ்விக்கும் ஸாதனம் வேறு எதுவும் இல்லை என்பதையும் நான் இப்போது மிகமிக நன்றாக, ஆழமாக உணர்ந்துவிட்டேன். இதோபாரம்மா! சித்ரா! இதோபாரு! ஜகதா...பாஸ்கரா...இந்தப் பெட்டியைத்திறந்துபாருங்கள்...என்று கூறியபடியே அங்கு புதிதாகப் போடப்பட்டிருந்த ஒரு பெரிய பெட்டியைக்காட்டினார்.

சித்ராதான் அதை உடனே திறந்தாள். ஜகதாவும் பாஸ்கரனும் வந்து சுற்றிக்கொண்டு பார்த்ததுதான் தாமதம், அவர்களும் முருகேசனைப்போலவே குதிக்கவாரம்பித்ததோடு சித்ராவை அப்படியே அலக்காய்த்தூக்கிக்கொண்டு கூத்தாடவும் தலைப்பட்டார்கள். சித்ரா! நீயே பாக்யசாலி! தீவட்டிக் கொள்ளைக்காரர்களால் கொள்ளையடிக்கப்பட்டுப் பறிபோன அத்தனை பொருளும் இதோ! அப்படியே பகவான் திருப்பிக் கொடுத்துவிட்டார்! துப்பறியும் வீரசிங்கமான நாயுடுகாருதான் இந்த மகத்தானவேலையைச் செய்து சாதித்து வெற்றி பெற்றிருக்கவேண்டும். நாம் திடீரென்று கண்டு ப்ரமித்துப் பூரிப்பதற்காக இப்படி ரகஸியமாய்க் கொண்டு வைத்திருக்க வேண்டும். சித்ரா! நீ கால் வைத்த வேளை செத்த உயிர் மீண்டதுபோல இழந்த செல்வம் மீண்டும் கிடைத்துவிட்டது.

இதோ பாரு,வைரநகைகள்... நகடிசேலைகள்...வெள்ளிபாத்தி ரங்கள்....நோட்டுக்கள்...என்று ஜகதாம்பாள் அபாரமான அலைமோதும் உணர்ச்சியுடன் குதித்தவாறு ஒவ்வொன்ருகப் பார்க்கிருள். சித்ராவை நடு நடுவே சேர்த்து அணைத்துக் கொள்கிருள்.

வீடு ஒரே ஆநந்த சாகரமாய்ப் பொங்குகிறது. குப்பன் மட்டும் இந்த அபரிமிதமான மகிழ்ச்சியில் பங்கு கொள்ளாமல் விட்டுவிடுவானு!...எஜமான் நான் அப்பவே சொல்லலீங்களா! நம்ப சின்ன எஜமானியம்மாளின் மூகத்தைப் பாக்கரபோதே பட்ட மரமும் பால்வடியும்னு சொன்னேனே! செத்த பண்ட மும் உசிரோடே வந்துவிட்டதுபாருங்க எஜமான்,என்னமோ ம்மா! சின்னம்மாளின் கால் ராசிலே செத்துப்போன பாட்டி யம்மாளும் அத்தையம்மாளும் கூட பொயச்சுவந்துடுவாங்க ன்னுபயமாயிருக்குதுங்க...என்றபோது ஜகதாவே சிரித்து விட்டு, டேய் குப்பா! திரும்பிவந்தால்கூட நல்லதுதாண்டா. ஏன் என்ருல்.நம்ப பெரிய எஜமான் நானு.ரெண்டுபேரும் நன் ருகமாறிவிட்டோம் பாரு. முன்பு பெரியம்மா சொன்னபடி எல்லாம் இப்போ சின்னம்மா நடத்திக்காட்டி எங்களையும் திருப்பி விட்டாங்களேடா! ஆகையால் இனிமேல் சண்டையே வராது. பயப்படாதே...என்று முடிப்பதற்குள் குப்பன்... அம்மா! அப்படின்னு! பெரிய எஜமானுக்கு ஒரு தொளஸி மணியும் ருத்ராக்ஷமும் வாங்கியாரட்டுமா! ஒங்களுக்கு ஒருமடி ஸஞ்சி...என்பதற்குள் சித்ரா அவனை விழித்துப் பார்த்து விட்டு, குப்பா! எஜமானர்களிடம் அதிக சலுகை இருந்த போதிலும் இத்தனை மரியாதை கெட்டுப் பேசக்கூடாதப்பா! பெத்ததாயாயினும் கூட அவளை முன்னறிதெய்வமாகப்பாவித் துத் தொழுவேண்டுமென்று சாஸ்திரம் சொல்கிறதப்பா! ஆகை யால் மரியாதையாயிரு.கேவலமாக்கிவிடாதே.என்று அதிகார த்வனியில் கூறினுள்.

முருகேசத்தின் சந்தோஷம் பின்னும் உச்சத்தை எட்டி யது. சித்ரா! நீ வயதில் சிறியவளாயினும் எனக்கு ஆசாரி யனைப்போல் ஜோதிஸ்வரூபியாகிவிட்டாய்! உன்னை நான் நமஸ்கரித்தல்கூடாதே என்பதனுல் உன்னுடைய இதயத்தி லிருக்கும் பகவானை நமஸ்கரிக்கிறேன். சித்ரா! நீ நேற்று நிர்மாணித்த பூஜாக்ரகத்தையே இனிநிரந்தரமான பூஜாக்ரக மாக்கி விடுகிறேன். நம்முடைய மற்றய சாமான்களை வேறு இடத்தில் மாற்றிவிட்டு அந்த விடுதியை ஒருசிறிய கோயில் போல் செய்துவிடுகிறேன்...பாஸ்கரா! நம் கொல்லத்துக் காரனையும் தச்சனையும் உடனே வரவழை...என்றபோது வழி மறித்து சித்ரா...மாமா! உங்களை நான் என்னிதய பூர்வமாய் நமஸ்கரிக்கின்றேன். அந்த தனியறையின் அழகு இப்போதுள் ளதே போதும். பஜனைமடம், பஜனைகோயில், ஸாக்ஷாத்

கோயில் இவைகளெல்லாம் தனித்தனியாக ப்ரத்யேகமாயிருப்பதுதான் சாஸ்திரமுறையேயன்றி வீட்டிற்குள்ளேயே ஒரு பகுதியை கோயில்போல் செய்யக்கூடாது. அம்மாதிரி செய்தால் அவர்கள் க்ஷேமத்துடன் வ்ருத்திக்கு வரமாட்டார்களாம். நாம் சதா சர்வதா நமது இதயத்தில் பகவானை வைத்துப் பூஜிப்பதேபோல் நமக்கென்று கடவுள் கொடுத்துள்ள வீட்டில் ஒரு தனியறையை பரிசுத்தமாக்கி அதில்கோயிலுக்கொப்பாக ஸ்வாமி படங்களையும் விக்ரகங்களையும் வைத்து பரிசுத்த இதயத்துடன்நம்கடமை இதுஎன்கிற ஒருதிடஉறுதியுடன் பூஜை செய்தால் போதுமே! கோபுரமும் மண்டபமும் வீடுகளில் கட்டுவது ஆகாது என்பார்கள். ஆகையால் அவசரப்படவேண்டாம். என்று நிதானமாகச் சொல்வதைக் கேட்டு எல்லோரும் பூரித்தார்கள் முருகேசமுதலியார் உள்ளே சென்று பட்டைபட்டையாய் விபூதியை அணிந்தார். தன் பிதா எந்த காலத்திலோ வைத்துச் சென்றிருந்த ருத்ராக்ஷத்தைத் தேடியணிந்து பஞ்சகச்சவேஷ்டியணிந்து பார்ப்பதற்கு ப்ரமாத பக்தசிகாமணிபோல் முற்றிலும் மாறிவிட்ட கோலத்துடன் வெளியே வந்து காட்சியளிப்பதைக்கண்ட ஜகதாம்பாளின் வியப்பு சொல்லமுடியாது கரைகடந்தது. தானும் தலையை சாதாரண கோடாலி முடிச்சிட்டு நெற்றியில் மங்களகரமாய் பெரிய குங்குமப்பொட்டணிந்து அவருக்குத் தக்கமனைவிதான் என்பதை நிரூபித்துவிட்டாள்.

தம்பதிகளாக இருவரும் உள்ளே சென்று சித்ராவினால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் படங்கள் விக்ரகங்களுக்கு புஷ்பம் சாத்தி நமஸ்கரித்தார்கள். எத்தகைய தோத்திரமோ! ச்லோகமோ! பாட்டோ! எதுவுமே தெரியாது பிழைத்த பிழைப்பை முருகேசம் அப்போதுதான் நன்றாக உணர்ந்து வருந்தினார். சித்ரா! நீ எங்களுக்குப் பூஜாவிதானத்தின்படி தோத்திரப்பாடல்கள், ச்லோகங்கள், முதலியவைகளைச் சொல்லிக்கொடம்மா! இனிமேல் நாங்கள் சிறுகுழந்தைகள்போல் கற்றுக்கொண்டு உஜ்ஜீவனத்திற்கு வழிதேடுகிறோம். முதல்முதற் நான் ஆதியில் அரிச்சுவடி படித்த பள்ளிக்கூடத்தில் ஒரு பாட்டு சொல்லிக்கொடுத்ததுமட்டும் நினைவிருக்கிறது; அதைச் சொல்கிறேன்...

கருணீஞ்சுடகீதிசமாயமய்யா. காரிராக்ஷகன்னு
கவிதீர்பவய்யா...

என்று தப்பும் தவறுமாகப் பதங்களைப்பாடுவதைக்கேட்ட சித்ரா கப்பென்று சிரித்துவிட்டு.. மாமா! அந்த காலத்திலேயே இந்தப்பாட்டு உண்டா! எனக்குக்கூட ஆறுவகுப்பில் இதைத்தான் மாமாசொல்லிக்கொடுத்தார்கள்...ஆனால் உங்களுக்குத் தப்புந்தவறுமாய்ச் சொல்லிக்கொடுத்ததுபோல் எனக்குசொல்லவில்லை. நன்றாக அர்த்தபாவம் ததும்ப சொன்

னார்கள். கருணீஞ்சுடகிதிசமாயமய்யா...காரி ராக்ஷகன்னா கலி தீர்பவய்யா! என்ற உச்சரிப்பு தப்பு மாமா...

கருணிம்சுடகுஇதி சமயமய்யா கரிரக்ஷகா. நா.

கலிதீர்ப்பவய்யா! என்று பிரித்துப் பாடவேணும். என் மீது கருணைசெய்து காப்பாற்ற இதுவே சமயம்! கஜராஜனைக் காப்பாற்றிய ரக்ஷகனே...என்று பகவானைப் பார்த்து ப்ரார்த்தனை செய்வதாகும். சரி, மாமா! இந்த ஆச்சரியமான காரியத்தை நமக்கு ஸாதித்துக் கொடுத்த நாயுடுவுக்கு நீங்கள் நேரில் சென்று வந்தனம் செலுத்தி நன்றிகூறி பகுமானங்கள் கொடுத்துவிட்டு வரவேண்டாமா! முதலில் நீங்கள் காலை ஆகாரம் எடுத்துக்கொண்டு போய்வாருங்கள். கடவுளை நம்பினால் கைவிடமாட்டார் என்ற தத்துவத்தை உணர்ந்துவிட்டீர்களல்லவா! இதுதான் நம் வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டிக்கொண்டு செல்லும் சக்திக் கருவியாகும்—என்று பெரிய உபன்யாஸமே செய்துவிட்டாள்.

முருகேசமுதலியார் படாடோப டாம்பீக உடையலங்காரங்கள் ஏதுமின்றி விபூதி, ருத்ராக்ஷ ஸஹிதம் வெகு ஜோரான வேஷ்டியுடன் ஜகதாம்பாளையும் கூட்டிக்கொண்டு நாயுடு வீட்டிற்குக் கிளம்பினார். பாஸ்கரனும் சித்ராவும் அடைந்த பூரிப்புக்கு எல்லைதான் ஏது. திரும்பக்கிடைத்த பொருள்களை தம்பதிகளே ஒழுங்காக எடுத்துவைப்பதில் முனைந்தார்கள்.

முருகேசமுதலியார் நாயுடு வீட்டையடைந்ததும் அவருடைய விசித்ரமான மாறுதல்களைக் கண்டு நாயுடுவின் வீட்டார் அபார வியப்படைந்து, ஏதேது முதலியாரவாள், இதென்ன ப்ரார்த்தனையா! அல்லது வேஷமா...இதென்ன சமாச்சாரம் என்று நாயுடு கேட்டார்.

முதலி:—ஸார்! உங்களுடைய லீதா வினோத மகிமையை எப்படித்தான் வர்ணிப்பது ஸார்! நீங்கள் செய்துள்ள இம்மகத்தான உபகாரத்திற்கும் ப்ரயாஸைக்கும் நாங்கள் எப்படித்தான் ஸார் கைம்மாறு செய்யமுடியும். எப்படி ஸார் இந்த வழக்கைக் கண்டுபிடித்து இத்தனை சொத்தையும் சந்தடி செய்யாமல் கொண்டுவந்துவிட்டீர்கள். எங்களுக்கு திடும்ப்ரவேசமான ஆனந்தத்தை உண்டாக்குவதற்காகவா இப்படிச் செய்தீர்கள்! என்று முருகேசம் சொல்வது ஒன்றுமே புரியாத நாயுடு குழம்பி விழித்தபடியே, என்ன என்ன! சொத்துக்கள் கிடைத்துவிட்டதா! நிஜமாகவா முதலியார்வாள்! விஷயத்தை விளங்கச் சொல்லுங்கள்! நானா கொண்டு வந்துவைத்ததாக எண்ணுகிறீர்கள். எனக்கு இது விஷயத்தில் ஒன்றுமே புரியவில்லையே! அம்புஜம் இங்குவா...என்று கூப்பிட்டார்.

முதலியாருக்கும் ஒன்றுமே புரியவில்லை. என்ன ஸார் இது, இன்னமும் விளையாடுகிறீர்கள்! எங்கள் வீட்டில் கொள்ளைபோன அத்தனை ஸாமான்களும் ஒரு தூசிகூட நிற்காமல் சகலமும் ஒரு பெரிய பெட்டியில் வைத்து என்னுடைய படுக்கையின் பக்கத்தில் அப்படியே இருக்கிறது ஸார்! நீர்தான் செய்த வேடிக்கை என்றல்லவா நினைத்தோம். திருடர்கள் பிடிபட்டு விட்டார்கள் என்றல்லவா நினைத்தேன். நான் தூங்கி எழுந்திருக்கும்போதே இந்த ஆச்சரியத்தைக் கண்டு பரமசந்தோஷமடைந்தேன். சித்ரா என் வீட்டில் கால்வைத்த அதிர்ஷ்டந்தான் இத்தனையும் சுபமாக நடந்து விட்டது என்கிற நம்பிக்கையும் உறுதியும் உண்டாகி என்னுடைய பழய குணங்கள் உடனே மாறி பரமபக்தனுகிவிட்டேன் ஸார்... சகலத்திற்கும் சித்ராதான் காரணம் ஸார், அவள் அதிர்ஷ்டந்தான் இம்மாதிரி நன்மைகள் உண்டாகிவிட்டது. என்கிற ஆநந்தத்தையும் உங்கள் உழைப்பின் வெற்றியையும் பாராட்டவே ஓடி வந்தோம். நீங்கள் என்னடா என்றால் ஒன்றுமே தெரியாதென்கிறீர்களே. என்று வியப்புடன் கூறினர்.

நாயுடுவின் ஆச்சரியம் கரைபுரண்டு விட்டது. இந்த வழக்கு விஷயத்தின விசித்ரத்தை எந்த விதம் நினைத்தாலும் அடங்கவில்லை. கொள்ளைக்காரர்களாவது கொள்ளையடித்த பொருளைத் திருப்பிக் கொடுப்பதாவது. ஸார்! இதில் ஏதோ சூது இருக்கவேண்டும் உங்களையும் என்னையும் சேர்த்து ஏமாற்றி இன்னும் எக்கச் சக்கமான ஆபத்தில் அகப்படவைத்து சோதிப்பதற்காக அதே கொள்ளைக்காரர்கள். இமிடேஷன் வைரநகைகளையும் கள்ள நோட்டுக்களையும் பெரிய பெரிய ஷாப்புகளிலிருந்து நகைகள், வெள்ளிப்பாத்திரங்கள், சேலைகள் முதலியவைகளைக் கொள்ளையடித்து அதை உம் வீட்டில் வைத்து கள்ளசொத்துகளை இங்கு கண்டெடுக்கும் படிக்குப் போலீஸுக்கும் அறிவித்து நம்மை எல்லாம் ஒரு ஆட்டு ஆட்டிவைப்பதற்குத்தான் ஏதோ அந்த மாயக் கொள்ளைக்காரர்கள் செய்திருக்கும் சதியான சூழ்ச்சியிது என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. நோட்டுக்களைச் சரியாகப் பார்த்தீர்களா! சொத்துக்கள் உங்களுடையதைப் போலிருந்ததா! உங்களுடையதுதானு என்பதை அடையாளங்களுடன் பார்த்தீர்களா! இப்போதே இதைப் போலீஸுக்கு அறிவித்து சொத்துக்களைக் காட்டிவிடுவோம். வாரும் என்று நாயுடு சொல்லிய இடிபோன்ற வார்த்தைகளையும் நுணுக்கமான ஆராய்ச்சி புத்தியினுடைய யோசனையையும் கேட்ட முருகேசத்தின் இத்தனைநேரம் கொந்தளித்துத் துள்ளிய சந்தோஷ ஸாகரம் அப்படியே வற்றிப்போய் தூக்கி வாரிப்போட்டு ஒரு கலக்குக் கலக்கி பெரும் பயமும் கவலையும் உள்ள குட்டையில் தூக்கி எறிந்ததுபோலாகிவிட்டது.

சோலையில் சரஸ்வதி பூஜை

(இரண்டு புதுமைக் கவிகள்)

அந்தப்பூந்தோட்டத்தை அவர் ஒருசோலையாகவே வளர்த்து விட்டார். ஒரு சமயம் உழுது செடி கொடிகள் நட்டுக் கொண்டிருப்பார். அழகு படர வித்திடுவார். ஒரு சமயம் தொழுது கொண்டிருப்பார்; சாந்தி தவழயச் சிந்தனை-வித்துக்களை ஊன்றிக்கொண்டிருப்பார்.

இந்தத் தோட்டக்காரர் ஒரு கவி வாணரும் கூட. மகா கவியல்ல: 'நயவுரைகள் தேடிக் கொழித்'துக் கவி பாடுவார்.

> பாமாலை கட்ட இன்சொல்
> பாவாணர் தேடுதல்போல்
> பூமாலை கட்டமலர்
> போயெடுக்கும் சேடியர்கள்

என்று ஒரு கவிஞர் பாடியிருக்கிறார், தமிழ்'சில்லறை'ப் பிரபந்தம் ஒன்றிலே. அந்தமாதிரி இவரும் இனிய மலர்களைத் தேடி மாலை கட்டுவார். இனசொற்களைத்தேடிப்பிடித்துப்பாமாலையும்கட்டுவார்.

இந்த நந்தவன பக்தர் அருளாளரும் கூட. இவரது நந்தவனச் சோலையிலே பூஞ்செடி கொடிகளுக்கிடையே நீரோடைகளில் அமுதமாக நீர் ஓடிப் பெருகுவதுபோல் இவர் நெஞ்சிலும் அழகிய நினைவுகளுக்கிடையே கருணை ஓடிப் பெருகும்.

இவரைக் கலைமகளின் உறைவிடமாகக் கருதலாம். இவருடைய நெஞ்சிலே கலைமகள் குடிகொள்கிறாள். நெஞ்சில் மட்டுமா? —இவர் உழுது செடிகொடி பயிரிடுகிறாரே, அந்தத் திருக்கைகளிலும் கலைமகள் ஆடிக் களிக்கின்றாள் என்று கருதலாம். பக்தியால் கவி பாடுகிறாரே,இந்த நாவிலும் கலைத்தெய்வம்உவந்து நடம் புரிவதாகக் கருதலாம்.

'வாமனன் மண்' என்று பெரியார் கருதும் பூமி தரிசாய்க் கிடக்கக்கூடாது என்று கருதி. உழுதொழிலில் ஈடுபடுகின்றவர்களின் கரங்களிலும் கைகளிலும் கலைமகள் நடம்புரிகின்றாள் என்று சொல்லலாம். காகிதத்தில் பேனாவால் உழுவது மட்டுமா கலைத்தெய்வத்திற்கு உகப்பாவது?

இப்படித் திறமைவாய்ந்த தொழிலாளியையும் அறிவாளியாக மதிப்பதுபோல், அறிவாளியையும் தொழிலாளியாக மதிக்கலாம். எழுத்தாளனுக்கு எழுத்து தொழில், கவிஞனுக்குக் கவிதை தொழில் மக்களின் இதயத்தை இயக்கிப் பெரிய லட்சியங்களை நோக்கிச் செலுத்தும் பாடலும் ஒரு வீரநிகழ்ச்சிதான், ஒருபெருஞ் செயல்தான்.

காந்தியடிகள் போன்ற அருளாளர்களை 'மகாத்மாக்கள்' என்று உலகம் போற்றுகிறதல்லவா? இவர்கள் கல்வியறிவைக் காட்டிலும் உள்ளொளியறிவை நம்பிச் செயற்கருஞ் செயல்களைச் செய்து விடுகிறார்களல்லவா?

இக்கருத்துக்களை யெல்லாம் எவ்வளவு நயமாக, அழகாக வெளியிடுகிறது கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையின 'சரஸ்வதி துதி':—

நாடிப் புலங்கள் உழுவார் கரமும், நயவுரைகள்
தேடிக் கொழிக்கும் கவிவாணர் நாவும், செழுங்கருணை
ஓடிப் பெருகும் அறிவாளர் நெஞ்சும், உவந்துநடம்
ஆடிக் களிக்கும் மயிலே! உன்பாதம் அடைக்கலமே

இப்பாட்டிலே 'செழுங்கருணை ஓடிப்பெருகும் அறிவாள'ருக்கு மகாத்மா காந்தி உதாரண புருஷர் என்றால், 'நயவுரைகள் தேடிக் கொழிக்கும் கவிவாண'ருக்கு நம் கவிமணியையே ஓர் உதாரணமாகக் கொள்ளலாம்.

பாரதியாரின் 'சரஸ்வதி ஸ்தோத்திர'ங்களுக்கு வந்ததும் நாம் இன்னும் சிறந்ததொரு கவிரகத்தைக் காண்கிறோம். 'ஞான கங்கை நாதமொடு எப்பொழுதும் என் தன் நாவினிலே பொழிந்திட வேண்டும்' என்பது சரஸ்வதி ஸ்தோத்திரம் ஒன்றினிடையே பாரதியாரின் பிரார்த்தனை.

கவிமணியை ஒரு பூந்தோட்டத்திலே 'நீர் அமுதமெனப் பாய்ந்து நிரம்பும்' நீரோடையாகக் கருதி மகிழலாமென்றால் பாரதியாரை ஒரு மலைக்காட்டிலே நாதமொடு பொழியும் ஓர் அருவியாக மதித்துப் போற்றலாம்.

பாரதியார் கண்ட சரஸ்வதி தேவியையும் நாம் ஒரு காட்டுச் சோலையில் கண்டு களிப்பதாகப் பாவித்துக் கொள்ளலாம்.

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்

என்று தளையவிழ்ந்து மலர்வதுபோல் மலர்ச்சி பெற்றுவரும் பாரதியாரின் பிரசித்தமான 'சரஸ்வதி தேவியின் புகழ்'ப் பாடல்களைக் கேட்டிராதவர் யார்?

ஒரு காட்டுச் சோலையில் ஒரு ராணி தன் தோழிமாருடனும் ஆஸ்தான கவியுடனும் தங்கிப் பொழுதுபோக்கிக்கொண்டிருக்கிறாள் என்று வைத்துக்கொள்வோம்.

அன்று சரஸ்வதிபூஜை தினம். அரண்மனையில் கொலு வைத்து மகிழாமல் இயற்கையே அழகுக்கொலு வைத்திருக்கும் சோலையிலேயே பொழுதுபோக்கிக் கொண்டிருக்கிறாள்.

அந்தச் சோலையிலே ஒரு தாமரைத் தடாகம். அந்தக் கரையிலே வீணாகானம் செய்துகொண்டிருக்கிறாள் ஒரு பெண். வேறொருத்தி வீணையையும் வென்றதுபோன்ற குரலில் பாடிக்கொண்டிருக்கிறாள்.

குழந்தைகள் மழலை உரையாடி விளையாடிக்கொண்டிருக்கிறார்கள் ஒருபுறம். வேறொருபுறம் கிளிப்பிள்ளைகள் மழலையுரையாடுகின்றன. இன்னொரு புறம் குயில் கீதம் பாடுகிறது. ஆஸ்தானகவிஞன் ஒருபுறம் இருந்து இயற்கையழகுகளில் மயங்கிக் கவிபாடிக்கொண்டிருக்கிறான், ஒரு சமயம் அவன் வேதம் பாடுகின்றான்.

இந்த நிலையில் இத்தகைய காட்டுச் சோலையிலே, 'இன்று சரஸ்வதி பூஜையல்லவா? தேவியை வழிபடவேண்டாமா?' என்ற நினைவு ராணிக்கு உண்டாகிறது.

தாமரைப் பொய்கையில் வெள்ளைத் தாமரைப் பூக்களைப் பார்த்ததும், கரையில் ஒரு தோழிப்பெண்ணின் வீணாகானம் கேட்டது 'சரஸ்வதி அதோ இருக்கிறாள்!' என்று ராணி அங்கே போகிறாள்.

183171

கொஞ்சநேரத்தில் அங்கேயிருந்து வேறொரு பக்கமாகச் சோலையில் உலாவும்போது ஆஸ்தான கவிஞனைக் காண்கின்றாள். அவன் அப்போதுதான் பாடிமுடித்த கவிதையைக் கேட்கின்றாள். பழமையான வேதத்தையும் ஓதி உட்பொருளும் சொல்லுகிறான் கவிஞன்.

'ஞானவுலகிலே கிழக்கு வெளுத்தது!' என்று உலகம் போற்றும் கள்ளமற்ற வேதவாசகங்களும், புதுமை வாசகமாகிய கவிதையும் மாறி மாறி உள்ளத்தை வசீகரிக்கின்றன. 'இங்கே இருக்கிறாள் சரஸ்வதி!' என்று ராணி உள்ளம் ஒருவாறு சாந்தி பெறுகிறது.

இப்போதுபாருங்கள் சரஸ்வதியைப் பாரதியாரின் வாக்கிலே:

கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம்பொருள் தேடி உணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின்(று) ஒளிர்வாள்
கள்ளம் அற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத்(து)உட்பொருள் ஆவாள்

தோழிமாரின் பாட்டையும், கிளிபோன்ற குழந்தைகளின் மழலைமென்மொழிகளையும், கிளிப்பிள்ளைகளின் பேச்சு முதலியவற்றையும் கேட்கும்போதும், சோலையில் சரஸ்வதி பூஜை போன்ற உணர்ச்சிதான் ஏற்படுகிறது.

மாதர் தீங்குரல்-பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவை இருப்பிடம் கொண்டாள்

இந்த ராணி இந்தக் காட்டுச் சோலைக்குப் பக்கத்திலே பூஜையில்லாத ஒரு பழைய காட்டுக்கோயிலைக் கண்ணுற்று உள்ளே போய்ச் சுற்றிப்பார்த்துச் சிற்ப சித்திர விசித்திரங்களை அனுபவித்தாள் என்றும் கருதலாம். பூஜையில்லாத இந்த கோயிலிலும் சரஸ்வதி கொலுவீற்றிருப்பது போலவே தோன்றியது.

கோதகன்ற தொழிலுடைத் தாகிக்
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனைத்தின் எழிலிடை உற்றாள்,
இன்ப மேவடி வாகிடப் பெற்றாள்.

இந்த ராணி முதலானவர்கள் சரஸ்வதி பூஜைசெய்ததாகவே கருதலாமல்லவா? பாரதியார் பாடுகிறாரே,

மந்திரத்தை முணுமுணுத்(து) ஏட்டை
வரிசை யாக அடுக்கி அதன்மேல்
சந்தனத்தை மலரை இடுவோர்
சாத்திரம்இவள் பூசனை அன்றாம்

என்று. எனினும் இந்தப் பூஜையும்,

வீடு தோறும் கலையின் விளக்கம்

விளங்குவதற்கு ஓர் அறிகுறியாக இருக்கலாமல்லவா?

அரிய தமிழ் விருந்து (தொடர்ச்சி)

ராணி சீலாவதி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
நான்காவது நவீனம் - ரூ-1/-

1. உபன்யாசமும் உதாசீனமும். 2. பேய்க்குக் கள் வார்த்த கதைதான் 3. வாக்கு பலித்தது—விபரீத யாத்திரையே 4. நிந்தனையும் நிபந்தனையும். 5. உவமையும் உவகையும். 6. வாழ்க்கைத் தோட்டத்தில் மலர்ந்த இதழ். 7. மடமையும் கடமையும்—சூழ்ச்சியின் வீழ்ச்சி 8. இனம் இனத்தைச் சேரும்—தூபமும் தாபமும். 9. விதையும் அறுவடையும் 10. தியாகச் சிகரம்—கடமையின் புண்ணிய வடிவம் 11. சீலாவதியும் சிலாவதியும் 12. ராஜரிஷியின் இதய கீதம்.

பெண்மணிக்கனல்

சரித்திரஜோதி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
ஐந்தாவது சித்திரம் ரூ 1/-

சரித்திர ஜோதி— 1. ஸ்தலமும் காலமும் 2. அஸ்திவாரம் 3. கபடநாடகமும் சூழ்ச்சிமேல்சூழ்ச்சியும் 4. இறுதி மொழியும் உறுதிப்பாடும் 5. சிங்கமும் புலியும் 6. வீழ்ச்சியும் மீட்சியும்

"கண்முனே காட்டினுள் பெண்மணிக்கனலை, பெண் சக்தியின் சிறப்பை, குன்ற உறுதியின் எல்லையை, மனமுண்டானால் மார்க்கமுண்டு என்ற உண்மையை! இந்திய சமஸ்தானங்களுள் பலவிதத்திலும் முன்னணியில் நிற்கும் மேன்மையை இன்று மைசூர் பெற்றிருப்பதற்கு உண்மையான அஸ்திவாரமிட்டவள் மாதரசி லக்ஷ்மி அம்மணியே!"

இருளில் ஒளி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
ஆருவது சுபர் ரூ. 1.4.0

முதல் பாகம்—1. இருளில் ஒளி 2. திருமகளின் திருவருள் 3. கனியும் கன்னியும் 4. உள்ளும் புறமும் 5. உள்ளொளி 6. மனநிம்மதி 7. ஒளியும் ஒலியும்.

இரண்டாம் பாகம்—1. ஒருபக்தனின் சந்தேகநிவ்ருத்தி 2. கோலும் கொடியும் 3. லகுவான உபாயம் 4. முடிவும் நடுவும் 5. தெய்விக இசையின் அத்புத சக்தி 6. மலையில் மலை 7. கோபியரும் உத்தவரும்.

Jaganmohini, (Oct. 1952.) Regd. No. M. 2210.

தற்போது கைவசமுள்ள வை. மு. கோ. நாவல்கள்

K 1. வைதேகி ரூ. 4—8
7. கோபாலரத்னம் 1—4
11. வீரவஸந்தா 1—0
15. நளினசேகரன் 1—0
25. பக்ஷமாலிகா 0—12
35. அனாதைப் பெண் 1—12
41. ★ வானக்குயில் 2—0
42. உளுத்த இதயம் 0—8
43. மகிழ்ச்சி உதயம் 1—4
45. மாலதி 1—0
46. வத்ஸகுமார் 1—0
49. படகோட்டி 1—2
50. ஆத்ம சக்தி 2—0
51. உணர்ச்சி வெள்ளம் 2—8
52. சந்தோஷமலர் 2—0
53. கருணாலயம் 2—0
54. புகழ்மாலை 1—12
55. தயாநிதி 2—4
56. சுடர் விளக்கு 0—12
57. கலாநிலயம் 1—12
58. ஞானதீபம் 2—4
59. வாத்ஸல்யம் 2—0
60. க்ருபாமந்திர் 1—4
61. மதுரகீதம் 2—0
62. பிரார்த்தனை 1—0
63. இதய ஒலி 1—12
64. ★ மலர்ந்த இதழ 2—8
65. அமுத மொழி (சாதா) 2—0
,, (கிளேஸ்) 2—8
66. பிரதிக்ஞை 1—0
67. ஆசைப்ரவாகம் 2—0
68. வாழ்க்கைத்தோட்டம் 2—4
69. ★ அபராதி 1—2
70. வெளுத்த வானம் 2—0
71. ப்ரதிபலன் 1—8
72. பவித்திரப்பதுமை 1—8
73. பெண் தர்மம் 1—0
74. உண்மைச் சித்திரம் 1—0
75. ★ தெய்வீக ஒளி 2—0
76. சிலாசாஸனம் 1-12
77. ★ புதுமைக்கோயில் 1—4
78. மனத்தாமரை (மலிவு) 1—0
79. ★ தபால்விநோதம் 1—0
80. ஓவியப்பரிசு 1—8
81. இனிய முரசு 1—0
82. ஆண்டவனின் அருள 1—0
83. இசைப்புயல் 1—8
84. அமரத்யாகி 2—0
85. காலக்கண்ணாடி 1—8
86. ஜெயபேரிகை 1—8
87. ஜீவநாடி 2—0
88. வீராங்கனை 1-12
89. கானகலா 0—8
90. தூய உள்ளம் 0—8
91. ஸௌபாக்யவதி 0—8
92. ப்ரேமாச்ரமம் 0-12
93. நியாயமழை 0--12
94. அருணோதயம்* 0--12
95. மனச்சாட்சி 0--12
96. ப்ரபஞ்சலீலை 0—8
97. வெற்றிப் பரிசு 0—8
98. ரோஜாமலர் 0—8
99. இந்திரமோஹனா* 1—0
100. பாதாஞ்ஜலி 2—0
101. அமைதியின் அஸ்திவாரம் 1-12
102. நம்பிக்கைப் பாலம் 1—8
103. சாந்தியின் சிகரம் 4—0
104. கடமையின் எல்லை

★ அச்சில் *நாடகம்

வை. மு. ஸ்ரீ. நூல்கள்

1. உதய சூரியன் 1—4
2. மதமா, மனமா ? 1—4
3. அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி 1—8
4. ராணி சிலாவதி 1—0
5. பெண்மணிக் கனல் 1—0
6. இருளில் ஒளி 1—4

ப்ர. ப. அண்ணங்கராசாரியர் உரையுடன்

ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம் 1—0
அபூர்வ ராமாயணம் 1—8
பாசுரப்படி ராமாயணம் 0—2
திருப்பாவை 0—2
ஸ்ரீ ஸ்துதி 0—4

யோகி சுத்தானந்த பாரதியார்

காந்தி கீர்த்தனம் 3—8

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed and published by V. M. PARTHASARATHY at the Jaganmohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.
Managing Editor: V. M. SRINIVASAN. M. A. B. L.